# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு2031 கார்த்திகை 4 ஞாயிற்றுக்கிழமை(19-11-2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:290


# மாவீரர் வார பாதுகாப்புக் குறித்து உயர்மட்ட மாநாட்டில் ஆராய்வு!

## தடுப்பு - எதிர்ப்புத் தாக்குதல்கள் வகுக்கப்பட்டன; உடன் அமுலுக்கு

கொழும்பு,நவம்பர்19

**நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் எடுக்கப்பட வேண்டிய தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து உயர்மட்ட மாநாட்டில் நீண்ட நேரம் ஆராயப்பட்டது.**

**முப்படைத் தளபதிகளும், பாதுகாப்புக் கூட்டு நடவடிக்கைத் தளகர்த்தர் ஜெனரல் றொஹான் தளுவத்தவும் பங்குபற்றிய பாதுகாப்புச் சபையின் கடந்த வார மாநாட்டில் மாவீரர் வாரப் பாதுகாப்பு முக்கிய இடத்தைப் பெற்றது.**

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க தமது வாசஸ்தலத்தை கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு மாற்றிய பின்னர், பாதுகாப்புச் சபையின் முதலாவது கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

பாதுகாப்புச் சபையின் இக்கூட்டத்துக்கு ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான சந்திரிகா குமார துங்க தலைமை வகித்தார்.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும் இப்போது நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு விடயங்களுக்கான பேச்சாளராக விளங்கும் பிரதமர் ரத்ன சிறி விக்கிரமநாயக்காவும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இருவரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் தமது மாவீரர் வாரங்களின் போது பேரழிவுகளை உண்டாக்கினர் எனச் சுட்டிக்காட்டி அவற்றைத் தடுப்பதற்கான தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 26ஆம், 27ஆம் திகதிகளை புலிகள் பொது விடுமுறைகளாக அறிவிப்பு

வவுனியா,நவ.19

மாவீரர் வாரத்தை முன்னிட்டு தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளை பொது விடுமுறைத் தினங்களாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் என்று வவுனியாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் களியாட்டங்களைத் தவிர்க்குமாறும் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

25ஆம் திகதி காலை 9 மணிக்கு மாவீரர் வார கொடியேற்ற நிகழ்வும்- 27ஆம் திகதி மாலை 5.45 மணிக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் நாள் உரையும் - இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து 6.02 முதல் 6.05 வரை ஆலயங்களில் மணி அடிக்கப்பட்டு 6.05க்கு மாவீரர் துயிலும் இல்லங்களில் தீபம் ஏற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-21)

## மழை தொடரும்

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள தாழமுக்கம் காரணமாக தற்போது பெய்துவரும் மழை இன்னும் சில நாள்களுக்குத் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு, முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ந்து பலத்த மழை பெய்யும் எனவும் தெரிவிக்கப் பட்டது. (அ-7)

## அரியாலை மற்றும் தென்மராட்சி பகுதிகளில் நேற்றுக் குண்டுவீச்சு

யாழ்ப்பாணம்,நவ.19

அரியாலை கிழக்கு, நாவற்குழி, கைதடிப் பகுதிகளில் நேற்று மிக் விமானங்கள் குண்டுவீச்சு நடத்தின.

நேற்று நண்பகல் 12.30 மணிக்கும் 3.00 மணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்தக் குண்டு வீச்சின் போது யாழ்நகரப் பகுதிகள் அதிர்ந்த வண்ணம் இருந்தன.

அதேசமயம் அரியாலைப் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் எரிபொருள் மற்றும் வெடி மருந்துக் களஞ்சியங்களை நேற்று பிற்பகல் விமானப் படையினர் தாக்கி அழித்து விட்டனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இராணுவத்தினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து விமானப் படையினர் இந்தத் தாக்குதலை நடத்தினர் என இராணுவப் பேச்சாளர் சரத் கருணாரத்ன தெரிவித்தார்.

விமானத் தாக்குதலை அடுத்து அரியாலைப் பகுதியில் இருந்து இரண்டு பாரிய வெடிச் சத்தங்கள் கேட்டன எனவும் -

அதனைத் தொடர்ந்து இரண்டு இடங்களில் இருந்து தீச்சுவாலைகள் எழுந்ததை விமானப் படையினர் கண்டனர் எனவும் - இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து தகவல் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## திருமலையில் ஹெலியைச் சுட்டுவீழ்த்த ரஷ்ய ஏவுகணையையே புலிகள் பயன்படுத்தினர்!

கொழும்பு,நவ.19

கடந்த 23ஆம் திகதி திருகோணமலை 'மாபிள் பீச்' பகுதியில் விமானப்படையின் எம்.ஐ.24 ரக ஹெலிக்கொப்டரை ரஷ்யத் தயாரிப்பு 'எஸ்.ஏ.-14' ரக குறுந்தூர ஏவுகணையைப் பயன்படுத்தியே விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணி சுட்டுவீழ்த்தியுள்ளது.

பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் இத்தகவலை உறுதிப்படுத்தியதாக கொழும்பில் இராணுவ விமர்சகர் ஒருவர் தெரிவித்தார்.

கடலுக்குள் இருந்து கடற்படையினரால் மீட்கப்பட்ட இந்தக் ஹெலிக்கொப்டரின் சிதைவுகளை. ரஷ்ய நிபுணரான கேணல் அலெக்ஸாண்டர் ஆய்வு செய்த பின்னர் அந்தக் ஹெலிக்கொப்டர் 'எஸ்.ஏ.-14' ரக ஏவுகணையால் தாக்கப்பட்டது என்பதை உறுதி செய்திருக்கின்றார்.

வெப்பத்தை உணர்ந்து செல்லும் ரகத்தைச் சேர்ந்தவையே 'எஸ்.ஏ.-14' மற்றும் 'எஸ்.ஏ.-16' ரக ஏவுகணைகள் ஆகும். இடத்துக்கிடம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாளைமுதல் 2 விமான சேவைகள்

யாழ்ப்பாணம்,நவ.19

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான பயணிகள் விமானச் சேவை நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்றது.

நேற்றும் ஒரு விமானச் சேவை மட்டுமே இடம்பெற்றது. 48 பயணிகள் இங்கிருந்து இரத்மலானை சென்றனர். இரத்மலானையிலிருந்து பலாலி வந்த விமானத்திலும் இதேயளவு பயணிகள் பயணம் செய்தனர்.

நேற்று இங்கிருந்து கொழும்பு செல்ல ரிக்கெட் எடுத்தவர்களில் 13 பேரின் பயணம் தவிர்க்க முடியாத காரணங்களினால் தடைப்பட்டு விட்டதாக சிவில் நிர்வாக அதிகாரி தெரிவித்தார். அவசரமாக கொழும்பு செல்வோரின் பட்டியல் ஒன்று இறுதி நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்பயண ரிக்கெட் வழங்கும் அலுவலகம் வெள்ளவத்தையில் அடுத்த வாரம் முதல் இயங்கும்

கொழும்பு,நவ.19

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் பயணிகள் விமான சேவைக்கான ரிக்கெட் வழங்கும் அலுவலகம் ஒன்று இந்த வாரம் கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் திறக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் விமானப்படைத் தளபதியிடம் கோரி இருந்ததை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாகக் கூறப்பட்டது.

விமானப் பயணிகளின் நன்மை

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாணவிகளுக்குத் தொல்லை கொடுக்கும் இளைஞர்களைக் கைது செய்ய உத்தரவு

### வவுனியா நீதிவான் நேற்று பிறப்பித்தார்

வவுனியா,நவ.19

மாணவிகளுக்கு வீதியில் வைத்து தொல்லை கொடுப்போரை உடன் கைது செய்யுமாறு வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் நேற்று வவுனியா போக்குவரத்துப் பொலீஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிலையங்களுக்கும் செல்லும் தங்களது பெண் பிள்ளைகள் வீதிகளில் இளைஞர்களினால் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகின்றனர் என சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணை மாவட்ட நீதிவான் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

விசாரணைகளின் முடிவிலேயே நீதிவான் சம்பந்தப்பட்ட இளைஞர்களை உடன் கைது செய்யுமாறு உத்தரவிட்டார். (இ-7)

## யாழ்ப்பாணம், குருநகர் களஞ்சியப் பொறுப்பாளரை விடுதலை செய்யக் கோரி மனு

### வவுனியா மேல்நீதிமன்றில் தாக்கல்

யாழ்ப்பாணம்,நவ.19

குருநகரில் உள்ள அரச களஞ்சியத்தின் பொறுப்பாளர் யாழ்.நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தும் அவரை விடுதலை செய்யக் கோரியும் அவரின் மனைவி வவுனியாவில் உள்ள வடமாகாண மேல்நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

களஞ்சியப் பொறுப்பாளரின் மனைவியான சரோஜினிதேவி கதிர்காமநாதன் மேற்படி மனுவை நேற்று முன்தினம் தாக்கல் செய்தார்.

மனு விசாரணைக்கு எடுக்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(18-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ. 804,082**

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## யாழ் நகர் மைய றோட்டரக்ட் கழகம்

**பரிசளிப்பு விழா பற்றிய முக்கிய அறிவித்தல்**

நேற்றைய உதயன் பத்திரிகையில் எம்மால் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் பரிசுக்குரிய மாணவர்களை யா/வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. அவ்வாறில்லாமல் சகலரையும் நேரடியாக **யா/மத்திய கல்லூரிக்கு** சமுகந்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



## பாராட்டுகின்றேன்



லாலாவின் பாராட்டுகள் லாலாவின் பாராட்டுகள்

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர்

**திருமிகு சின்னையா நடராஜலிங்கம்**

அவர்கள் சிரேஷ்ட முகாமையாளராக (Area Manager) பதவி உயர்வு பெற்றமையையிட்டு எமது மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

*லாலா சோப் தொழிலகம்*

*அச்சுவேலி*

(C/13399)



## யாழ்.றோட்டறிக் கழகம்

எம்மால் 2000/2001 ஆண்டுக்கான தொழில் விற்பன்னராக தெரிவாகி நேற்றைய தினம் கௌரவிக்கப்பட்ட

- ★ ஓவியர் சந்திரலிங்கம் சந்திரசேகர் (கொக்குவில் மேற்கு)
- ★ கைவினைஞர் வேணுகோபால் இராமன் (306, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.)
- ★ கைவினைஞர் வேலுப்பிள்ளை பாலேந்திரன் (காளி கோயிலடி, தெல்லிப்பழை)

ஆகியோரை பொது மக்களுக்கு வெளிப்படுத்துகிறோம்.

(C/13896) யாழ்.றோட்டறிக் கழகம்.



## JAFFNA TECHNICAL INSTITUTE

யாழ்மாவட்டத்தில் கடந்த 21 வருடங்களாக பல்வேறு துறைகளில் பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்கு சிறப்பாக பயிற்சியளித்துவரும் எமது நிறுவனத்தில் மாணவர்களின் கணனி அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் இரண்டாவது தடவையாக கணனிப் பயிற்சி நெறிக்கு 2001ஆம் ஆண்டில் போட்டிப் பரீட்சை (பொது அறிவு, நுண்ணறிவு) மூலம் புலமைப் பரிசில் வழங்கவுள்ளோம்.

**விண்ணப்ப முடிவு திகதி : 15-12-2000**

*விபரங்கள் நேற்றைய உதயனில்*

*Head Office:*
J.T.I
No.52/1 Stanley Road, Jaffna.

*Branch:*
J.T.I
No.7, Palaly Road, Jaffna.

**- Director.**

(C/13882)


## 31ஆம் நாள் நினைவலைகள்



ஆண்டவன் படைப்பு 17 - 05 - 1975

ஆண்டவன் பறிப்பு 20 - 10 - 2000

### செல்வி தர்சினி மாணிக்கவாசகர்

(3ஆம் வருட மாணவி, விஞ்ஞானபீடம்)

பரிவுடனே வரவேற்று பாசமுடனே அரவணைத்த - எம் அக்காவே!
விஞ்ஞானபீடத்தில் வித்தகி ஆகிவிடுவாயென உன் பெற்றோர்கள்
- கனவுகாண
பிரியாவிடை பெறு முன் பிரிந்தது தான் ஏனோ?
எம்மையும் மௌனமாக்கி விட்டு எங்கேதான் சென்றாயோ?
சென்றவழி பார்த்தோம் நீ வருவாயென கண்கள் பூத்துவிட்டன
உனக்கு எம் கண்ணீர் பூக்களை காணிக்கை ஆக்குகின்றோம்.

விஞ்ஞான பீட
இரண்டாம் வருட மாணவர்கள்
யாழ்.பல்கலைக்கழகம்.

(80681)

## சமயபாடப் பரீட்சை

நீர்வேலி.நவ.19

நீர்வேலி காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபையினரால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் சமயபாடப் பரீட்சை இன்று நடைபெறும்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம், நீர்வேலி சீ.சி.த.க. பாடசாலை, சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை ஆகிய பரீட்சை மண்டபங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது. (இ-110)

## பண்ணிசை மனனப் போட்டிகள்

சண்டிலிப்பாய்.நவ.19

சங்கானை கோட்டக் கல்வி அலுவலக பிரிவைச் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையிலான சைவ சமய திருமுறை, பண்ணிசை மனனப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம், வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி ஆகியவற்றில் இப்போட்டிகள் நடைபெறும் என்று சங்கானை கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.செல்லையா அறிவித்துள்ளார். (இ-135)

## கட்டடத் திறப்பு விழா

சண்டிலிப்பாய்.நவ.19

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள ஆரம்பப் பிரிவு செயற்பாட்டு அறைக் கட்டடத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை இடம்பெறும்.

## தவறிவிட்டது

நேற்று 18.11.2000 கல்வியங்காட்டு மீன் சந்தைக்குள் பேர்ஸுடன் விசேட அடையாள அட்டை (0903014660), தேசிய அடையாள அட்டை (766153844V) ஆகியனவும் காப்பு, பென்ரன், மணிக்கூடு, காதுச்செயின் என்பன தொலைந்துவிட்டன. கண்டெடுத்தவர்கள்

**சின்னராசா பிரபாகினி**
கட்டப்பிராய்,
முத்துமாரியம்மன் கோயிலடி
என்னும் முகவரியில்
ஒப்படைத்துதவவும்.
சன்மானம் வழங்கப்படும்.


## லஷ்சுமி சினிமா

இணுவில்

அர்ஜுன், ரம்பா நடித்த

**சுதந்திரம்**

ரீல்ஸ்

காட்சிகள்:10.30, 2.30 (பழையநேரம்)



## ராஜா யாழ்ப்பாணம்

சிவா, மோகினி, நாசர், ஸ்ரீவித்தியா, வெண்ணிறாடைமூர்த்தி மற்றும் பலரின் நடிப்பில்

*[illegible] ரோஜாவே*

நாளை முதல் அமோக ஆரம்பம்
விஜய், சிம்ரன், மணிவண்ணன் மற்றும் பலர் நடிப்பில் இனிய பாடல்கள் கொண்ட

*துள்ளாத மனமும் துள்ளும்*

காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)



## நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், ரோஜா, ரம்பா, ஆனந்தராஜ் நடித்த

**அடிமைச்சங்கிலி**

(ரீல்ஸ்)

காட்சிகள் - 11.00, 2.30 (பு.நே.)

(80682)


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1922 - 02 - 20

மறைவு 1999 - 12 - 01

### அமரர் சி.பெரியதம்பி

திதி : 19-11-2000

ஓடி மறைந்தது ஓராண்டு, ஓடவில்லை உன் நினைப்பு ஐயா!
கோடி தவமிருந்தாலும் தேட முடியுமா உன்போல...
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

*கல்லூரி வீதி,*
*பருத்தித்துறை.*

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C/13897)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 17 - 05 - 1975

உதிர்வு 20 - 10 - 2000

### செல்வி தர்சினி மாணிக்கவாசகர்

(யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் - கணனித்துறை மூன்றாம் வருட மாணவி)

கடந்த 20.10.2000 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது மகள் செல்வி தர்சினி மாணிக்கவாசகர் அவர்களின் மரணச் செய்தி கேட்டு விரைந்து வந்து எமக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், வடமராட்சிக் கல்வி வலய அதிகாரிகள், அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்கள், தொலைபேசி, தந்தி, கடித மூலம் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்கள், சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்கள் எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (19.11.2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள அந்தியேட்டிக்கிரியையிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*தம்பசெட்டி,*
*பருத்தித்துறை.*

தந்தை, தாய்,
சகோதரர்கள்.

(C/13894)

## விண்ணக வாழ்வு எய்திய 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 20 - 05 - 1939

ஆண்டவன் அரவணைப்பில் 20 - 10 - 2000

### திருமதி லூர்த்தம்மா சிறில்

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே!
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

அன்பான எங்கள் தெய்வமே!
அரவணைத்த அம்மாவே!
அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் தலைவியாய்
எம் உயர்விற்காக நல்வாழ்வு
காட்டிய எம் அன்பு அம்மாவே!

எமது தாயாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக நவக்கிரி புனித நீற்றம்மாள் ஆலயத்தில் (19.11.2000) ஞாயிறு இன்று காலை 8.00 மணிக்கு (பு.நே) திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இரங்கற் திருப்பலிகளில் பங்கு கொண்டு தாயாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக மன்றாடும்படி வேண்டுகின்றோம்.

லூர்த்தம்மா சிறில் அவர்களின் பிரிவால் துயருறும்
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
பெறாமக்கள்,
உற்றார், உறவினர்.

*ஆவரங்கால் கிழக்கு,*
*புத்தூர்.*

(C/13895)

உதயன்

## நீதிதேவன் கண்காணிப்பு

மக்கள் சமூகத்தின் உயர்வைக் காட்டுவது நீதி. நீதியை வழுவறக் கடைப்பிடித்த மக்கள் வாழ்ந்த காலம் இல்லாமல் இல்லை. ஆனால் இப்போது நீதியைப் பற்றி — தர்மத்தைப பற்றி — அக்கறைப்படுவோர் கையளவினரே.

தானுண்டு தனது நல்னுண்டு என்று எண்ணி அதனை இலக்கு வைத்துச் செயற்படுவோரின் — வாழ்வோரின் — எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் நீதியான சமூகம் உருவாகுவது இயலாத ஒன்றாகி விட்டது.

தமக்குள்ள உரிமைகளும் தமக்குள்ள வசதிகளும் அடுத்தவனுக்கும் உண்டு என்பதனை அங்கீகரிக்க மறுப்பவர்கள் பெருகிவிட்டதால் இன்றைய சமூகத்தில் அநீதியும் அதர்மமுமே மலிந்து விட்டன.

அரசர்கள் ஆட்சி செய்த காலத்தில் தமது குடிமக்கள் எல்லோருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையாக இருந்தார்கள். மக்களுக்கு மட்டுமன்றி மாக்களுக்கும் நீதி வழங்கிய மனுநீதி கண்ட சோழன், சிபிச் சக்கரவர்த்தி போன்ற மன்னர்கள் நீதிவழுவா நெறி முறையில் நின்றவர்கள். ஏனைய ஜீவராசிகளுக்கும் நீதி வழங்கியவர்கள் பண்டைய தமிழர்கள்.

ஆனால் மக்கள் ஆட்சியில் நீதியைப் பேண வேண்டும் என்ற அக்கறை குறைந்து வருகிறது. ஜனநாயகத்தின் மூன்று முக்கிய தூண்களில் நீதித்துறையும் ஒன்று. ஆட்சித்துறை, நிர்வாகத்துறை என்பன மக்களுக்குரிய உரிமைகளைச் சரிவர வழங்குகின்றனவா, சேவைகளை நியாகபூர்வமாகச் செய்கின்றனவா என்பதனைக் கண்காணித்து மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வது நீதித்துறையின் பெரும் பொறுப்பு.

அந்த வகையில் மக்களுக்கான நீதியை நிலைநாட்டுவதில் யாழ்ப்பாண நீதிமன்றம் பெரும் சிறப்பினையும் முன் உதாரணத்தையும் தந்திருக்கிறது.

ஆம். மக்களுக்குரிய நிவாரணப பொருள்களை வழங்குவதில் நிர்வாகத்துறை காட்டிய தாமதத்தைக் கண்டு, அதனை உடனே வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு மக்களைப் பட்டினியில் இருந்து காப்பாற்றியது. மககள் அதனைப் போற்றும் வகையில் ''நீதிமன்ற ஆணையால் கிடைத்த நிவாரணம்'' என்று நன்றிகூறும் வகையில் இவ்விவகாரத்தைக் கையாண்ட யாழ்ப்பாண நீதிவான் நீதி போலவே உயர்ந்து நிற்கிறார்.

நிர்வாகத்துறையில் உள்ளவர்கள் மட்டுமன்றி, ஏனைய துறைகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி ஆட்சித்துறையில் வளையாக் கோலோச்ச வேண்டியவர்களாயினும் நெறிமுறை வழுவும்போது நீதி பார்த்துக் கொண்டிருக்காது என்பதனை இடித்துரைக்கும் தீர்ப்பாக யாழ். நீதிமன்றத்தின் நிவாரணம் வழங்குவது சம்பந்தமான தீர்ப்பு மிளிர்கிறது.

நீதியின் கோல், சமன்செய்து சீர்தூக்கும் கோலாக — மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்யும் கோலாக — அதிலிருந்து வளைந்தவர்களை நிமிர்த்தும் கோலாக — விளங்கும் என்பதனை எல்லோருக்கும் உணர்த்தும் ஒன்றாக அந்தத் தீர்ப்பு முழு நீதித்துறைக்கும் ஒரு முன்னோடியாக மின்னுகிறது.

எந்தக் கருமத்தையும் தொழிலையும் தர்மவழிநின்று மக்கள் செய்கிறார்களா என்பதனை நீதிதேவன் — இறைவன் — மேலே நின்று அவதானிக்கிறான்; கண்காணிக்கிறான் என்பதனை எல்லோரும் உணர்ந்து கொள்வாராக.

# இஸ்ரேலிய இராணுவம் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஜேர்மனியர் பலியானார்!

காஸா, நவ. 19

ஜோர்டான் நதியின் மேற்குக் கரையில் அமைந்துள்ள 5 பலஸ்தீன நகரங்கள் மீது இஸ்ரேலியப் படைகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஜேர்மனிய மருத்துவர் உட்பட 3 பேர் பலியாகினர். 17 பலஸ்தீனர்கள்படுகாயமடைந்தனர்.

இறந்த ஜேர்மனியர் அப்பகுதியில் நீண்டகாலமாக மருத்துவ சேவையை நடத்தி வந்ததாகக் கூறப்படுகிறது.

காஸாப் பகுதியில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டுள்ள இஸ்ரேலியப் படைகளின் ராணுவ நிலைகளுக்கு அருகே பலஸ்தீனர்கள் நடத்திய இரு வெவ்வேறு வெடிகுண்டுத் தாக்குதல்களை அடுத்தே பலஸ்தீன நகரங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம், ஜெருசலேம், மேற்குக்கரை, காஸா ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமைத் தொழுகையின்போது அனைத்து மசூதிகளிலும் இஸ்ரேலியப் படைகள் கடும் பாதுகாப்புக் கெடுபிடிகளை மேற்கொண்டன.

அன்று தொழுகையில் ஈடுபடச் சென்ற பலஸ்தீனர்களில் 45 வயதுக்கு மேற்பட்டவர்களை மட்டுமே இஸ்ரேலியப் படைகள் மசூதிகளுக்குள் அனுமதித்தனர். மற்றவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

கடந்த செப்ரெம்பர் 28 ஆம் திகதி இஸ்ரேலியப்படைகளுடன் மோதல்களை நடத்தி வரும் பலஸ்தீனர்கள் மசூதிகளில் ஒன்றுகூடித் தொழுகையை நடத்திவிட்டு அங்கிருந்து அணி திரண்டு இஸ்ரேலிய நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தி வந்ததாலேயே மேற்படி நடவடிக்கையை இஸ்ரேல் எடுத்துள்ளதாகக் கருதப்படுகிறது.

## வன்முறைகளைக் கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகள்

### இஸ்ரேல் பிரதமர் கூறுகிறார்

ஜெருசலேம் நவ. 19

மேற்குக்கரைப் பிரதேசத்தில் தொடரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இஸ்ரேலியப் பிரதமர் எகுட்பராக் அறிவித்துள்ளார்.

பலஸ்தீனப் பிரச்சினை தொடர்பாக அவசரமாகக் கூட்டிய அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரேலியப் பிரதமர் இதனை அறிவித்தார்.

வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அதிசயத்தீர்வு எதுவும் தற்போது வந்துவிடப்போவதில்லை. எனவே இஸ்ரேல் எனது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பு வெளியான சிலமணி நேரங்களில் பலஸ்தீன இராணுவ பிரிவு தலைமையகம் உட்பட பல முக்கிய இலக்குகள் மீது இஸ்ரேல் ஹெலிகள் தாக்குதல்களை நடத்தி உள்ளன.

அதேநேரம் மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதிகளில் வன்முறைகள் தொடர்கின்றன. இறுதியாக நடைபெற்ற வன்முறைகளில் இஸ்ரேலியப் படையினரின் தாக்குதல் காரணமாக 8 பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 7 வாரங்களாகத் தொடரும் இந்த வன்முறைகளில் இதுவரை 230க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

வன்முறைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் அதே வேளை சமாதானத்தை நிலைநாட்டுவது தொடர்பான முயற்சிகளில் அமெரிக்கத் தூதர் டெனிஸ்ராஸும் ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் இகோர் இவானோவும் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியாவுடன் மியான்மர் உடன்பாடு

இந்தியாவுடனான எல்லைப் பகுதியில் தீவிரவாதத்தையும், போதைப்பொருள் கடத்தலையும் எதிர்த்து நடவடிக்கைமேற்கொள்ளமியான்மர் இந்தியாவுடன் உடன்பாடு செய்துள்ளது.

புதுடில்லி வந்துள்ள மியான்மர் இராணுவ அரசில் இரண்டாவது நிலையில் உள்ள ஜெனரல் வாவ் ஆயீ இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே இந்த உடன்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## அசாமில் 7 பேர் பலி

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் தீவிரவாதிகள் சுட்டதில் 3 குழந்தைகள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்

சிஸ்கர் மாவட்டத்தில் இராணுவ சீருடை அணிந்து வந்த 10 தீவிரவாதிகள் அஸாமியர் அல்லாத வர்த்தகர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து சரமாரியாகச் சுட்டதில் வர்த்தகர், அவரது மனைவி 3 பிள்ளைகள் மற்றும் இரு விருந்தாளிகள் அந்த இடத்திலேயே இறந்தனர்.

அதன் பின்னர் அருகில் உள்ள கம்மல் சாத்ரிக்குச் சென்ற இதே தீவிரவாதிகள் அங்கும் அஸாமியர் அல்லாத வியாபாரி ஒருவரைச் சுட்டுக் கொன்றனர்.

இந்தப் படுகொலைகளைச் செய்த தீவிரவாதிகள் அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்

அஸாம்மாநிலத்தில் வாழும் அஸாமியர்கள் அல்லாத பொதுமக்களைத் தீவிரவாதக் கும்பல் சுட்டுக்கொள்வது சமீபகாலத்தில் 6 ஆவது முறையாக இப்போது நடந்துள்ளது.

## எரிபொருள் விலை குறைக்க வற்புறுத்து

பெற்றோலிய உற்பத்தி நாடுகள் வளரும் நாடுகளுக்கு குறைந்த சலுகை விலையில் பெற்றோலியப் பொருள்களை விற்க முன்வர வேண்டும் என்று இந்தியா வற்புறுத்தியுள்ளது.

சிரியாவில் நடைபெறும் பெற்றோலிய உற்பத்தியாளர்கள் மற்றும் உபயோகிப்பாளர்களின் 7 ஆவது சர்வதேசக் கூட்டத்தில் இந்திய எரிபொருள் சக்தி அமைச்சர் ராம் நாயக் பேசுகையில் இதனை வலியுறுத்திளார். (ஒ)

## நிலக்கரி அதிகாரிகளிடம் திடீர் சோதனை

புதுடில்லி, நவ. 19

இந்திய அரசின் மத்திய நிலக்கரிச் சுரங்க நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஜி. அக்லா உட்பட நிலக்கரி நிறுவனத்தின் அனைத்து உயர் அதிகாரிகளின் அலுவலகங்கள் மற்றும் இல்லங்களில் மத்திய புலனாய்வுத் துறையினர் ஒரே சமயத்தில் திடீர் சோதனை நடத்தியுள்ளனர்.

நிலக்கரி விநியோகத்தில் ஊழல் புரிந்து வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்த முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

**உதயவாக்கு**

பிறரை வெறுப்பது நம்மையே தண்டிப்பதாகும்.

-இத்தாலியப்பழமொழி

# வீரப்பனைப் பிடிக்க காட்டுக்கு அதிரடிப்படையை அனுப்பக் கூடாது

## கருணாநிதியிடம் நெடுமாறன் வலியுறுத்து

சென்னை, நவ. 19

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிக்க அதிரடிப்படையை அனுப்ப வேண்டாம் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தமிழக முதல்வர் கருணாநிதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

வீரப்பனிடம் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த நடிகர் ராஜ்குமாரை மீட்ட பின்னர் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசிய போது இவ்வாறு தெரிவித்ததாக நெடுமாறன் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடையே உரையாற்றியபோது கூறினார்.

வீரப்பனைத் தேடிச்சென்ற அதிரடிப்படையினால் பாதிக்கப்பட்டோர் குறித்து விசாரித்து வரும் சதாசிவம் ஆணையத்தின் விசாரணைகள் முடிந்து, நஷ்டஈடுகள் வழங்கப்பட்டு, அத்துமீறிய அதிகாரிகள் தண்டிக்கப்பட்ட பின்னர் வீரப்பனைப் பிடிக்க அதிரடிப்படையை அனுப்புவது பற்றிப் பேசலாம் என்று முதல்வரிடம் கூறியுள்ளதாக நெடுமாறன் தெரிவித்தார்.

வீரப்பன் விடுதலை செய்யக் கோரிய மைசூர் சிறையில் உள்ள 51 தமிழர்கள் மற்றும் தமிழகச் சிறையில் உள்ள 5 தமிழ்த் தீவிரவாதிகளை விடுதலை செய்வது எங்கள் பொறுப்பு என்று உறுதியளித்ததாலேயே வீரப்பன் நடிகர் ராஜ்குமாரை விடுவித்ததாகத் தெரிவித்த பழ. நெடுமாறன் சத்தியமங்கலம் வனப்பகுதியில் உள்ள மலைவாழ் மக்களின் சமூக பொருளாதாரச் சூழல்களை மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதவரை வீரப்பன்கள் உருவாகிக் கொண்டுதான் இருப்பார்கள் என்று குறிப்பிட்டார்.

முன்னதாக நடிகர் ரஜினிகாந் சென்னையில் பழ.நெடுமாறனைச் சந்தித்து ராஜ்குமாரைவிடுவித்ததற்கு நன்றி தெரிவித்தார். (ஒ-8)

**நாளை**

கார்த்திகை 5

திங்கட்கிழமை

திதி: நவமி

முற்பகல் 09.23 வரை.

நட்சத்திரம்: பூரம்

பி.ப. 5.23 வரை

சுபநேரம்: 12 10—1.40

ராகுகாலம்: 7.40 - 9.10

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நடிகர் ராஜ்குமார் வீட்டருகே தமிழர் கடைகள் மீது தாக்குதல்

நடிகர் ராஜ்குமார் வீட்டருகே அவரது ரசிகர்கள் வியாழக்கிழமை வன்முறையில் இறங்கினார்கள்.

வீரப்பனால் விடுவிக்கப்பட்ட நடிகர் ராஜ்குமார் வியாழன் அன்று காலை பெங்களூர் வந்தார்.

அவர் தனது வீட்டுக்குச் செல்லாமல் நேராக தலைமைச் செயலகம் அமைந்துள்ள விதான் சௌதாவுக்குச் சென்று முதல்வர் கிருஷ்ணாவைச் சந்தித்து உரையாடினார்.

இதேவேளை, சதாசிவா நகரில் காலை முதல் திரளத் தொடங்கிய ரசிகர்கள் நேரம் செல்லச் செல்ல கட்டுக்கடங்காத கூட்டமாக மாறினர். கட்டு மீறிய கும்பல் அப்பகுதியில் இருந்த தமிழ்ப் பெயர்ப்பலகை உடைய கடைகளுக்குக் கல் வீசினர்.

இது சிறிது நேரத்தில் வன்முறையாக வெடித்தது. தமிழ் நாட்டுப் பதிவு இலக்கம் கொண்ட இரு வாகனங்களுக்கு தீ வைத்த வன்முறையாளர்கள், கட்டடங்களையும் தாக்கிச் சூறையாடினர்.

பொலீஸார் சம்பவப் பகுதிக்கு விரைந்து சென்று நிலைமையை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (ஒ-8)

## 600 பேர் விடுதலை

சிரியாவில் தடை செய்யப்பட்ட அமைப்புக்களைச் சேர்ந்த 600 அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி பஷர் அல் அஷத் உத்தரவிட்டுள்ளார்.

## கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக 1 ஆம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை (20 - 11 - 2000) திங்கட்கிழமை பகல் 11-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

**கலைப்பீட மாணவர் ஒன்றியம்**

(80672)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 17 — 10 — 1944

மறைவு 20 — 10 — 2000

அமரர்

### பொன்னுத்துரை குணசிங்கம் (சிவம்)

(ஆ. இராசையா அன் சன்ஸ், மருந்துக்கடை ஊழியர்)

நேற்றுச் சிரித்தபடி நிஜமாய் இருந்தீரே!
காற்றாகி இன்று ஏன் கடிதில் பிரிந்திட்டீர்?
சொல்லாமல் போனதெங்கு சொல்லுங்கள் அப்பா!
உள்ளங்கள் கதற இங்கு ஏங்கித் தவிக்கின்றோம்.
வெள்ளத்துயர் வடிய வந்து கண்கள் துடைக்காயோ
அப்பா!

இன்று (19-11-2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**அன்பின் மனைவி, பிள்ளைகள்.**

தற்காலிக முகவரி:
பத்தாணைக் கேணியடி,
தொல்புரம்.

நிரந்தர முகவரி:
இல.26, 4 ஆம் குறுக்குவீதி,
(கொழும்புத்துறை.

(80655)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி சங்கரப்பிள்ளை கமலாம்பிகை

மலர்வு 03 — 02 — 1920

உதிர்வு 20 — 10 — 2000

விக்கிரம ஆண்டதன் ஐப்பசித் திங்கள் தேய்
பக்கத்து அட்டமியே தக்கதே செய் மிக்கநல்
மாவடியான் தாளே நினைகும லாம்பிகை
தாவறப்பார் நீங்கிய நன் னாள்.

பாரினில் நாம் பண்புடன் என்றும் வாழ பாசத்துடன் வளர்த்த அம்மாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மீசாலை வெள்ளை மாவடி விநாயகப் பெருமானை வேண்டி நிற்கும்:

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தற்காலிக முகவரி:
இமையாணன்,
உடுப்பிட்டி

நிரந்தர முகவரி:
மீசாலை தெற்கு
மீசாலை.

(80597)

## மாணவர்களுக்கு பரிசளிக்கும் வைபவம்

கொழும்புத்துறை, நவ. 19

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தொல்புரம் அ. மி. த கலவன் பாடசாலை மாணவர்களைப் பாராட்டி பரிசளிக்கும் வைபவம் அண்மையில் பாடசாலை அதிபர் வி மீனேஸ்வரன் தலைமையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்பட்டது.

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செயலாளர் சி. சி. வரதராசா, தொல்புரம் மத்திய சனசமூகநிலைய வாசிகசாலையின் தலைவர் சி சிவபிரகாசம் உட்படப் பலர் பாராட்டி உரை நிகழ்த்தினர்.

இப் பரீட்சையில் சித்தி பெற்று பரிசில்கள் பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

செல்வி உலகநாதன் - சுகிர்தா (156 புள்ளி), செல்வி சந்திரராசா - தாரணி (145 புள்ளி), நாகேந்திரம் நாக நிஷாந் (140 புள்ளி).

(ஐ-30)

## எழுவைதீவில் நடமாடும் சேவை

நெடுந்தீவு, நவ. 19

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் எழுவைதீவுக்கான நடமாடும் சேவை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் பல்வேறு திணைக்களங்களையும் சேர்ந்த அதிகாரிகள் இதில் கலந்து கொள்வர்.

பிறப்பு - இறப்புச் சான்றிதழ்கள், அடையாள அட்டைகள் உட்பட பொதுமக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து மேற்படி நடமாடும் சேவையின் போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஐ-111)

## பாடசாலைக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், நவ. 19

பன்முகப்படுத்தப்பட்ட வரவு — செலவுத் திட்ட நிதியில் இருந்து புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகாவித்தியாலயத்தின் கட்டடப் புனரமைப்புக்கென இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் எஸ். கே சண்முகலிங்கம் தெரிவித்தார்

ஈ பி டி பி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து அமைச்சரும், ஈ. பி டி. பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரையின் கீழ் இந்த நிதியுதவி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது

(ஐ—7)

## எழுவைதீவில் பனம் விதை நடுகை

நெடுந்தீவு, நவ. 19

எழுவைதீவு மேற்குக் கடற்கரையை அண்டிய பகுதிகளில் பனை அபிவிருத்திச் சபை பொதுமக்களின் உதவியுடன் மூவாயிரம் பனம் விதைகளை நடுகை செய்துள்ளது.

தற்சமயம் சுமார் 2 லட்சம் பனைகள் வரை அங்கு உள்ளதாகவும் புதிதாகப் பனம் வடலிகள் எவையும் காணப்படவில்லை எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் எஸ். பாலகிருஷ்ணனுடன் சென்ற குழுவினர் பனம் விதைகளை அங்கு நடுகை செய்தனர்.

(ஐ-111)

## மரண அறிவித்தல்கள்

### செல்லம்மா பொன்னுத்துரை

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லம்மா பொன்னுத்துரை நேற்று [18—11—2000] சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற சுப்பையா-பறுவதத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், பத்மராஜா (வாகன அணி அலுவலர், புனர்வாழ்வுப்பகுதி), இந்திராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இரத்தினம்மா, தேவராஜா ஆகியோரின் சகோதரியும், சபாரெட்ணம், வனசாட்சி ஆகியோரின் மைத்துனியும், விஜயரெட்ணம், சபாநாயகி, தனநாயகி, சிவநாயகி, லோகா ஆகியோரின் பெரிய தாயும், தர்மகுலசிங்கம்(வேலைப்பகுதி,யாழ். மாநகர சபை) சிவநாயகி, வனமாலா, தேவமாலா, ராஜ்குமார், சுபகுமார், கௌரிமாலா ஆகியோரின் மாமியாரும், மாலதி, தர்ஷினி, பவனுஷா, கிருஷாந், ஜவாஹரி, நவீன், ஹரினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (18—11—2000) சனிக்கிழமை அன்னாரது இல்லத்திலிருந்து (நந்தாவில் லேன், கொக்குவில்) 4.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

**பொ பத்மராஜா [மகன்]**
**மு. தர்மகுலசிங்கம் [மருமகன்]**

நிரந்தர முகவரி:-
203/2, கண்டிவீதி,
அரியாலை.

தற்காலிக முகவரி:-
நந்தாவில் லேன்,
கொக்குவில்.

(80664)

### சின்னப்பு இரத்தினம்

உடுவிலைச் சேர்ந்த சின்னப்பு இரத்தினம் 18- 11- 2000 அன்று காலமானார்.

இவர் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், ஜெகதீசன் (யாழ். பல்கலைக்கழகம்), நித்தியவாணி, ஜெயக்குமார் (கனடா), (ஜெகநாதன் (யாழ். பல்கலைக்கழகம்), ஜெயசீலன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், சந்திரிகாதேவி (யாழ். பல்கலைக் கழகம்), இராஜேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை (முன்னாள் உப அதிபர், வட்டு. இந்துக்கல்லூரி), ஸ்ரீகலா (யாழ். பல்கலைக்கழகம்), சுசிலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சேந்தன், அம்பிகா, ஆதித்தன், மாயவன், ஆதவன், சஞ்ஜயன், ஜனார்த்தனன், ஜனனி ஆகியோரின் அன்பும் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, நடராஜா, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின்இறுதிக் கிரியைகள்இன்று (19-11-2000) காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

**இ ஜெகதீசன் (யாழ். பல்கலைக்கழகம்),**
**இ ஜெகநாதன், (யாழ். பல்கலைக்கழகம்).**

உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

(80673)

### பொன்னம்பலம் தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற கணக்காய்வாளர் - புகையிரத திணைக்களம்)

அரியாலையைச் சேர்ந்த பொ. தர்மலிங்கம் நேற்று (18-11-2000) அதிகாலை சிவபதமெய்தினார்

அன்னார் கமலாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லம்மா- பொன்னம்பலம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், இளைப்பாறிய தபாலதிபர் கோ கந்தையாவின் மருமகனும், நாகேந்திரா (கனடா), சர்வேந்திரா (நோர்வே), திருமதி வே. கோமளா (முன்னாள் ஆசிரியை, யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்), லோகா (விரிவுரையாளர்- விவசாய பீடம் யாழ்ப்பாணம்), ஆகியோரின் பாசமிகு தந்தையும்,வே. சிவதநாயகத்தின் (லண்டன்). அருமை மாமனாரும், வே. கோகுலனின் ஆசைப் பேரனும், காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி, சொர்ணேஸ்வரி தவமணி மற்றும் புவனேஸ்வரி (லண்டன்), சவுந்தராணி, (சந்திரா-இந்தியா), சுந்தரலிங்கம் (ஓய்வு பெற்ற இலிகிதர் - கிளிநொச்சி), சண்முகலிங்கம் (படவரைஞர் - புத்தளம்), ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்போதையவதிவிடத்தில் நேற்று மாலை 3. 00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் திருநெல்வேலி செம்பாட்டு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

**செல்வி லோகா தர்மலிங்கம்**
(மகள்)

தற்காலிக முகவரி:
வைரவர் கோயிலடி,
முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

நிரந்தர முகவரி:
39/1, ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை.

(80675)

# சமய, சமூக, அரசியல் துறைகளில் ஏற்பட்ட சீர்திருத்தத்தின் தந்தை ஆறுமுகநாவலர்

**சி.சக்திகிரீவன்**

சைவத் தமிழ்க் கலாசார மறுமலர்ச்சியின் தந்தை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினம் இன்றாகும்.

ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆட்சியில் 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருள் சூழ்ந்த எமது பூமியை ஒளி பெறச்செய்து நம்மவர் மத்தியில் சைவத்தமிழ் உணர்வை ஊட்டி வளர்த்த பெருமைக்குரியவர் நாவலரே.

எமது புண்ணிய மண் போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும், ஆங்கிலேயராலும் ஆளப்பட்டு எமது கலை, கலாசாரங்கள் முழுமையாக அழிபடும் நிலையில் இருந்த போது 1822 ஆம் ஆண்டில் நாவலர் தோன்றி மேற்கொண்ட சைவத் தமிழ்ப் புத்துயிர்ப்பியக்கங்கள் எம்மவரை விழித்தெழச் செய்தன.

கிறிஸ்தவ மிஷனர்மார் மேற்கொண்ட மதமாற்ற நடவடிக்கைக்கும் சைவ தூஷணத்திற்கும் பரிகாரம் காணும் நோக்கில் 'சைவ தூஷண பரிகாரத்தை' வெளியிட்டதோடு எம்மவரை எமது மதத்தில் உறுதியாக நிற்கவும் வழி சமைத்தார்.

சைவசமயத்தில் இல்லாத குறைகளை வேண்டுமென்றே குறையெனப் பழித்தவர் மீது கண்டனக் கணைகளைத் தொடுத்தார்.

போலிக் கிறீஸ்தவர்களையும் ஏன் போலிச்சைவர்களையும் போலிப் பிராமணர்களையும் போலி தர்மகர்த்தாக்களையும் கண்டிப்பதற்கு நாவலர் தயங்கவில்லை. நாவலரின் பொய்யற்ற வாழ்வும், அழியா ஒழுக்க நெறியும், தெய்வத்துணையும் நாவலரின் துணிச்சலுக்குக் காரணமாயிருந்தது.

நாவலர் வெறும் சமயக் கண்டனத்தோடு நின்றவர் அல்லர். யாழ்ப்பாண சமூக, அரசியல் விவகாரங்களில் மிகுந்த துணிச்சலோடு செயற்பட்டவர். மக்களை அந்நிய ஏகாதிபத்தியத்திற்கெதிராகக் கிளர்ந்தெழச் செய்த வீரர்.

1876 ஆம் ஆண்டு மழையின்மை காரணமாக எமது பிரதேசம் பெரும் பஞ்சத்திற்குள்ளானது. நாவலர் கஞ்சித் தொட்டி இயக்கம் ஒன்றை நடத்தி மக்களுக்கு உதவினார். இச் சூழ்நிலையில் ஏழைகளுக்கிரங்கி அரசாங்கம் உதவ முன்வந்தது. இந்த உதவியை வட மாகாண அரச அதிபரும் அவரின் கீழுள்ள உத்தியோகத்தர்களும் உறிஞ்சிவிட்டனர். நாவலர் போர்க்கோலம் பூண்டார். நீதிக்காக கர்ச்சித் தெழுந்தார்.

ஊழற்பேர்வழிகளைச் சமூகத்திற்கும், அன்றைய தேசாதிபதிக்கும், பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கும் அம்பலப்படுத்தினார். இதன் காரணமாக அரச அதிபர் பதவி இழக்கும் சூழ்நிலைக்கு ஆளானார் என்றும் அறியக் கிடக்கிறது.

சைவத் தமிழ்த்தொண்டு செய்வதற்காக தான் திருமணம் செய்யாது சுகபோக வாழ்வைத் துறந்து தன் உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்த தியாகி நாவலர்.

நாவலர் காலத்திற்கு முன் ஆலயங்களில் பிரசங்க முறை இருந்ததில்லை. புராணபடனம் மட்டுமே இருந்து வந்தது. சாதாரண மக்கள் புராணபடனத்தை விளங்க முடியாதிருந்ததை நாவலர் புரிந்து கொண்டார். இதனை நிவர்த்தி செய்வதற்கு புதிய யுக்தியாக நாவலர் சைவ ஆலயங்களில் பிரசங்கத்தைத் தொடங்க எண்ணினார்.

31-12-1847 இல் வண்ணை வைதீஸ்வரன் ஆலயத்தில் முதற் பிரசங்கத்தை ஆரம்பித்து வைத்தார். அவரது சைவத்தமிழ் நாதம் இன்றும் ஒலித்தபடியே இருக்கின்றது என்று கூறின் மிகையாகாது.

சைவத்தமிழ் இலக்கண இலக்கியங்கள் முழுவதும் செய்யுள் நடையிலே இருந்தது. இதனை விளங்குவதில் மக்களுக்கு ஏற்பட்ட சிரமங்



**அவர் செய்த தியாகங்களில் நாம் சிலவற்றையேனும் செய்வோமாக!**

களை தீர்க்கும் வகையில் செய்யுள் நடையில் இருந்த தமிழ் மொழிக்கு வசன நடை பயிற்றுவித்த ஆசானும் நாவலரே.

நாவலரின் வசன நடையின் அழகைப் பாராட்டிய வீ.கோ.சூரியநாராயண சாஸ்திரிகள் நாவலரை "வசன நடை கைவந்த வல்லாளர்" என்று போற்றியுள்ளார்.

பாடசாலைகளையும் திண்ணைப் பள்ளிக் கூடங்களையும் நிறுவி மக்களுக்கு அறிவொளியூட்டியதோடு மாணவரும் பொதுமக்களும் சைவத் தமிழ் உண்மைகளை விளங்கக் கூடிய வகையில் துண்டுப் பிரசுரங்களையும், நூல்களையும் வெளியிடுவதற்கு வண்ணையிலும், சென்னையிலும் "வித்தியானு பாலன" அச்சியந்திரசாலைகளை நிறுவினார். அவர் பரிசோதித்தும் புதிய உரை எழுதியும் புதிதாய எழுதியும் வெளியிட்ட நூல்கள் 59. அச்சிற் பதிப்பிக்கும் நோக்குடன் எழுதி முடித்தவை 10; எழுதத் தொடங்கியவை 9. இவையெல்லாம் அவரது 21 வயதிலிருந்து அவர் இறக்கும் வரையுள்ள காலப்பகுதியாகிய 35 ஆண்டுக்கிடையில் பாரிய சமய, சமூக, அரசியற் பணிகளுடன் நிறைவேறின என்றால் வியக்க வேண்டியதாகவே உள்ளது. இவர் எழுதிய 59 நூல்களில் ஓர் எழுத்துப் பிழையோ, ஓர் அச்சுப்பிழையோ, ஓர் இலக்கணப் பிழையோ இல்லாதிருந்தமை வேறெவரும் சாதிக்காத ஒன்று.

நாவலரின் சைவத்தமிழ் தொண்டையும், தமிழாங்கிலப் புலமையையும், நாவன்மையையும், கருவிநூல் - சாஸ்திர நூல் அறிவையும், தமிழகம் பலமுறை வியந்து பாராட்டியுள்ளது. திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் எனும் கௌரவ விருதை வழங்கிப் பெருமை கொண்டது.

மதுரை ஆதீனம் தனது காதணியையும் உருத்திராட்சத்தையும் நாவலருக்கு அணிவித்து மகிழ்ந்தது. தமிழகத்தில் உள்ள பேரறிஞர்கள் எல்லாம் திரண்டு பாராட்டிய பெருமைக்குரியவர் நாவலர். முன்னொரு முறை பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் நாவலர் பற்றிக் குறிப்பிடுகையில் "முன்னே பலகாலம் தமிழகத்திலிருந்து தான் பெற்ற சிறுசிறு நன்மைகளை வட்டியுடன் பெருக்கி ஒரு காலத்து ஒருமுகமாய்ப் பழங்கடனை தீர்த்தது என்றும் தீர்க்கொணாவாறு தமிழகத்தை ஈழநாட்டிற்கு கடமைப்படுத்திய பேருபகாரி நாவலர் என்றால் அது மிகையாகாது" என்றார்.

இத்தகைய பெருமை பெற்ற நாவலர் போல் தொண்டு செய்ய, முன்னர் யாரும் பிறந்ததும் இல்லை; இனிப் பிறக்கப் போவதுமில்லை. எமக்குள்ளே நாம் நாவலர் பாரம்பரியத்தில் வாழ்கிறோம் என்று பெருமையடைவதோடு நின்றுவிடாது நாவலர் செய்த பெரும் தியாகங்களில் சில வற்றையாவது நாமும் எமது சமூகமும் மேற்கொள்ள திரிகரண சுத்தியோடு செயற்படுத்துவதே நாவலருக்கு நாம் செய்யும் கைம்மாறாகும்.

★ ★ ★ ★

## மணிமண்டபம்

# நியாயமான உரிமைகள்

இலங்கை இனப்பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்டதன்று.

"சுதந்திரத்துக்குப் பின்னர்தான் அது தன் கைகளை ஆட்டிக் கால்களை உதைக்கத் தொடங்கியது என்பது உண்மைதான்; ஆனால் அதற்குப பல ஆண்டுகளின் முன்னரே அது கருவாகி உருவாகிவிட்டது - கருக்கட்டப்பட்டு உருவாக்கப்பட்டுவிட்டது!

இந்திய சுதந்திரப் போராட்டம் இலங்கைத் தலைவர்கள் சிலரையும் 'உசுப்பி'விட்ட ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதுகளில் -

அரசியற் சட்டச் சீர்திருத்தங்களுக்காகப் பாடுபடுவதன் நோக்கம் "தேசத்தின் சுதந்திரம்" எனத் தெரிவிக்கப்பட்டது!

"சிங்கள பௌத்த மேலாண்மை" என்பது 'நாசூக்'காக மறைக்கப்பட்டது!

'தேசியப்பட்டுக் குடை'யின் கீழ், தமிழ்த் தலைவர்களை இழுத்து அணைத்துத் தம்முடன் சேர்த்துக் கொண்ட சிங்களத் தலைவர்கள், தாம் விரும்பிய வேளை, விரும்பிய மாதிரி அந்தக் குடையைச் சுருக்கி - விரிக்கும் உரிமையைத் தம்மிடமே வைத்துக்கொண்டனர்!

சிரித்துக்கொண்டே சிறுமைப்படுத்துகின்ற - அணைத்துக்கொண்டே 'அள்ளி' வைக்கின்ற - கூட இருந்து கொண்டே குழிபறிக்கின்ற - பேரினவாதத தந்திரத்தை-

காலங் கடந்த பின்னராவது கண்டுணர்ந்து தமிழ் மக்களை எச்சரித்த பெருமைக்குரியவர்கள் -

தேசியத் தலைவர்களாக இன்றும் போற்றப்படும் சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோர்!

ஆனால், தமிழ் மக்கள் விழிப்படைந்து விட்டனர் என்பதை உணர்ந்த பேரினவாதம், தன் உத்தியை விரிவு படுத்தியதே தவிர, தன் உள்நோக்கத்தைக் கைவிடவில்லை!"

தமிழ் மக்களிடையேயுள்ள பிளவுகளையும் பிரிவுகளையும் தலைவர்கள் சிலரிடமுள்ள 'உயர்வு மனப்பான்மை'யையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கியது!

பதவியையும் பணத்தையும் வாக்குறுதியையும் வளமான வாழ்வையும் காட்டித் தமிழ்த் தலைவர்களை 'வாங்க'த் தொடங்கியது!

இதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய பேராபத்தை முன்கூட்டியே உணர்ந்து எச்சரிக்கத் தொடங்கியவர் தந்தை செல்வா! இனப்பிரச்சினைக்குச் சிறந்த தீர்வாகச் சமஷ்டி என்ற கூட்டாட்சி முறையை முன்வைத்த அவர், சிங்கள மக்கள் அதை ஏற்கத் தயாராக இல்லை என்றால், பிரிவினை தவிர்க்க முடியாததாகிவிடும் என்றார்!

சமஷ்டி என்றாலே "பிரிவினை"தான் எனச் சிங்களத் தலைவர்கள் திரித்துக் கூறத் தொடங்கியமையும்-

தமிழ்த் தலைவர்கள் சிலர் அதற்கு உடந்தையாக இருந்தமையும் -

தந்தை செல்வாவின் பின்னர் வந்த கூட்டணித் தலைவர்களிடையே தயக்கமும் தடுமாற்றமும் ஏற்பட்டமையும் -

பொறுமை இழந்த தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில இறங்கியமையும் -

ஒரே ஒரு குழுவினர் மட்டும் மிகவும் உக்கிரமாகப் போராடி வருகின்றமையும் -

சமீபத்திய வரலாறு!

இந்த நிலையில் -

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம்; பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்வொன்றைக் காணமுடியும்; போரினாலோ வேறு வன்செயல்களினாலோ அல்ல என்று -

யாருக்குமே தெரிந்திராத ஓர் உண்மையைத் தாங்களே முதன் முதலில் உணர்ந்து கொண்டவர்களைப் போன்றும் -

பேச்சுவார்த்தைக்குத் தமிழ்த் தரப்பினர்தான் தயாராக இல்லை என்பதைப் போன்றும் -

ஆட்சி அதிகாரத்தில் இருப்போர் கடந்த சில மாதங்களாக உரத்துக் குரலெழுப்பி வருகின்றார்கள்!

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும் ஓர் உண்மையைத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஆண்டாண்டு காலமாகத் தமிழ் மக்களை ஏமாற்றியும் மிரட்டியும் அவர்களின் உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்தும் அவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தியும் வந்தோர் இன்று பேச்சுவார்த்தை மூலம் அவர்களின் உரிமைகளை வழங்குவதற்குத் தாம் முன்வந்துள்ளதாகக் கூறுகின்றார்கள் என்றால் -

அவர்களின் பரந்த மனப்பான்மையோ, சமாதானத்தின் பால் அவர்களுக்குரிய பற்றோதான் அதற்கான காரணம் என்பதைவிட -

தமிழீழத்துக்கு மாற்றாக நல்ல தீர்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டால் அதைப் பரிசீலிக்கத் தயார் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் கூறியிருப்பதைப் பலர் வரவேற்றிருப்பதும், இராணுவத்திற் சேர்வதற்குச் சிங்கள இளைஞர்கள் பின்னடிப்பதும், போர் காரணமாக நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்திற்குச் சென்றுவிட்டமையுமே காரணங்கள் என்பதுதான் பொருத்தமாகும்.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும் என இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்துவரும் இவ்வேளையில் -

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் யாவை என்பது உடனடியாகத் தீர்மானிக்கப்பட வேண்டும்!

தீர்மானிக்க வேண்டியவர்கள் தமிழர்கள் மட்டுமே!

சிங்களப் பெரும்பான்மையினர் அல்லர். பாதியைப் பெற்றுக்கொண்டு மீதிக்காகப் பாடுபடுவது சாத்வீகப் போராட்ட முறைகளிலே சாத்தியந்தான்!

ஆனால் -

ஆயுதப் போராட்டம் நிர்ப்பந்தித்துள்ள பேச்சுவார்த்தைகளின்போது, பெறவேண்டிய அனைத்து உரிமைகளையும் ஒட்டுமொத்தமாகப் பெற்றுக் கொள்வதே புத்திசாலித்தனம் என்பதை உணர்ந்துகொண்டு -

நியாயமான உரிமைகள் பற்றித் தீர்மானிப்பதற்கும் தமிழ் மக்களின் ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் நிலைநாட்டுவதற்கும், பொறுப்பு வாய்ந்த தமிழ்த் தலைவர்கள் களத்தில் நிற்கும் போராளிகளுடன் முதலிற் பேசுவதற்கு முன்வரவேண்டுமே தவிர -

அரசுடன் பேசப்போய் அனைத்தையும் குழப்பி விடக் கூடாது.

**சித்தன்**

# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

குறிப்பு:- இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**17.11.2000 (வெள்ளிக்கிழமை) வரை கிடைத்த நிதி:-**

| | | ரூபா |
|---|---|---|
| | முன்கொண்டுவரப்பட்டது | - 766,714 |
| 1. | ரஞ்சனாஸ் தொலைத்தொடர்பு நிலையம் - யாழ். | - 500 |
| 2. | ஊழியர் விளையாட்டு நலன்புரிக்கழகம், இலங்கை வங்கி - பருத்தித்துறை | - 2,000 |
| 3. | ஓர் ஓய்வூதிய அன்பர் - வைமன் றோட், நல்லூர் | - 200 |
| 4. | பெ.பாக்கியம் - சங்கரப்பிள்ளை றோட், ஆனைக்கோட்டை | - 205 |
| 5. | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக ஊழியர் நலன்புரிச் சங்கம் - யாழ்ப்பாணம் | - 6,050 |
| 6. | எஸ்.ராஜி - திருநெல்வேலி | - 200 |
| 7. | ஓர் கல்லூரி - யாழ்ப்பாணம் | - 8,000 |
| 8. | அதிபர், ஆசிரியர் கழகம் - யாழ்.நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் | - 1,000 |
| 9. | குமரகோட்டம் சன சமூகநிலைய நிர்வாகத்தினர் - கோண்டாவில் | - 500 |
| 10. | புனித வின்சென்ஷ போல் சபையினர் - யாழ்.அடைக்கல அன்னை ஆலயம் (O.L.R) | - 500 |
| 11. | ஓர் சகோதரி - உரும்பிராய் தெற்கு | - 500 |
| 12. | அன்புத்தந்தை அமரர் M.A.அன்ரனி ஞாபகார்த்தமாக மைந்தன் - ஆனைக்கோட்டை | - 201 |
| | மொத்தம் | 786,570 |


# தொடர்பு கொள்ளவும்

யாழ்.பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள மாருதி விலாசை நடத்தும் அளவெட்டியைச் சேர்ந்த அர்ச்சுதன் ரவீந்திரனை மாருதி விலாசின் (கட்டடச் சொந்தக்காரர்) பராமரிப்பாளர் சார்பாகக் கீழ்க்காணும் முகவரியில் உடன் சந்திக்கும்படி கேட்டுக்கொள்கின்றனர்.

**தர்மலிங்கம் சிறீஸ்கந்தராசா,**
**பூதராயர் கோயிலடி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு,**
**புன்னாலைக்கட்டுவன்.**

(80591)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு

நவற்கிரி அச்சுவேலி வீதியில் நவற்கிரி மாதாகோயிலுக்கு அண்மையில் ஒருபக்கம் றோட்டையும் இரண்டு பக்கம் ஒழுங்கையையும் கொண்ட சற்சதுரமான 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சிவபாத சுந்தரமூர்த்தி, 55, சீனியர்லேன், கலட்டி அம்மன் கோயிலடி, யாழ்ப்பாணம். (80598)

## விற்பனைக்கு

வெற்றுச் சோடாப் போத்தல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:-இல. 6, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். **T.P.No. 2332.** (80619)

நல்ல நிலையில் உள்ள புதிய றொபின் ஜெனறேற்றர் **EY** 20 (ஜப்பான்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ச. ஜெயரட்ணம், 971/1, **K.K.S Road**, அரசடிப் பிள்ளையார் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (80649)

## உடன் விற்பனைக்கு

**T.V. Black and White** (அன்ரனா உட்பட), துவிச்சக்கர வண்டி (ஆண், பெண்), புத்தகங்கள், பாத்திர வகைகள், பீங்கான் வகைகள், மோட்டார் சைக்கிள்(சாளி), மின்சார உபகரணப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:-34/7, செட்டிதெரு, நல்லூர். (80614)

## சனிமாற்றம்

11-04-2001 வரை சனி வக்கிர மாற்றம். 01-02-2001 வரை வியாழ வக்கிர பலன்கள். ரூபா 10க்கு எங்கும் விற்பனையாகின்றன. கணிப்பு:- சத்யா, 3 ஆம் மைல், ஆனைக்கோட்டை தொலைபேசி:- 021-2753. (80652)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

**Alsation** நாய்க்குட்டிகள் (கறுப்புக் குட்டிகள் உட்பட) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80636)

## மணமக்கள் தேவை

யாழ். இந்து உயர் குடும்பத்தைச் சேர்ந்த 40 வயதுடைய மணமகனுக்கும் (விரிவுரையாளர்), 30 வயதுடைய அவரது சகோதரிக்கும் தகுந்த மணமக்களை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு: விளம்பர இல.1138,மே/பா உதயன். (80499)

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969ஆம் ஆண்டு, செவ்வாய்க் குற்றம் உள்ள, 5'3" உயரமான, நற்குணம் மிக்க, அழகிய, அரச தொழில் பார்க்கும் பட்டதாரி மணமகளுக்கு உள்நாட்டில் தொழில் புரியும் தகுதியுடைய மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சகல விவரங்களுடன் தொடர்புகளுக்கு: விளம்பர இல. 1121, மே/பா உதயன். (79713)

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, உத்திராடம் நட்சத்திரம், 12 இல் செவ்வாய்-42பாவமுள்ள, **B.Sc.** கெமிஸ்ரி படித்த மணமகளுக்கு கல்வித் திறமையுள்ள மணமகன் விரும்பத்தக்கது. வெளிநாடு, உள்நாடு சாதகம் உண்டு.தொடர்பு-செ. விஜயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய், முருகன் திருமண சேவை. (80651)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம் அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் மிகச்சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். மிகக்குறுகிய காலத்தில் முழுப் பாடத்திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும். சந்திப்பு 3.00 மணிக்குப் பின்பு. **R.** பாலசுப்பிரமணியம் **B.Sc. (Cey) Dip. in Ed.**, 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (80666)

## CAR FOR SALE

**Peugeot 504 GL- 9 Sri for sale. Topping condition. Contact - Rasa Vamadevan, 180, Point Pedro Road, Jaffna. T.P:3239.** (80668)

## தவறிவிட்டது

முத்தையா தேவதாசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.423521457v)10-11-2000 அன்று யாழ்ப்பாணத்திற்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல.7, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (80647)

குருநகரைச் சேர்ந்த பிலிப் றெஜிநோல்ட் மேரிகியூரியா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 797012300v), விசேட அடையாள அட்டை (இல.0901008233) ஆகிய இரண்டும் ஆனைக்கோட்டைப் பகுதியில் 16-11-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து குட்டித்தம்பி, காக்கைதீவு. மாதிரிக்கிராமம், ஆனைக் கோட்டை எனும் முகவரியில் கொடுத்துதவவும். (80662)

உரும்பிராய் மேற்கு கோண்டாவில் எனும் முகவரி உடைய நடராசா மயில்வாகனம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 13-11-2000 அன்று கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கவாஸ் கொமினிக்கேசன், கோண்டாவில் (டிப்போ விற்கு முன்பாக) எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (80665)

## இறைச்சிக்கோழி விற்பனை

**Broiler** இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம்.19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80661)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி கல்பேட் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்புக்கு:- 31, மாஸ்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (80292)

இறைச்சிக்கோழி (கல்பேட்ஸ்) விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.(80663)

## விற்பனைக்குண்டு

புறோயிலர் சேவல்,கல்பேட் விற்பனைக்குண்டு. வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (80667)

## நிவாரண விநியோகம்

அரியாலை, நவ.19

யாழ். பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச நிவாரணம் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் ஊடாக இந்த நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

நிவாரண அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்ட பின்னரே நிவாரணம் வழங்கப்படுகிறது. (ஐ-17)

## பிரபந்த சொற்பொழிவு

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தான ஸ்ரீலக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் இன்று பிற்பகல் 4.15 மணிக்கு நாலாயிரம் திவ்விய பிரபந்தச் சொற்பொழிவுகள் நடைபெறும்.

இந்தச் சொற்பொழிவுகள் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறவுள்ளன. (ஐ-180)

# இதய அஞ்சலி

அமரர்

**குணரத்தினம் செல்லத்துரை** (S.L.P.S)

எமது வித்தியாசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த இளைப்பாறிய அதிபர் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து துயருடன் அவரை நினைந்து வணங்குகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

**வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை, பொன்னாலை.** (80660)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 1940 - 05 - 20



உதிர்வு 2000 - 10 - 19

அமரர்

**கதிரவேலு செல்வரத்தினம்** (செல்வம்)

**(ஓய்வு பெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர், C.W.E.)**

அன்போடு எம்மை அரவணைத்துப் பாசத்துடன்
காத்துவளர்த்த அன்புத் தெய்வமே! உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலியை பத்திரிகையிலும் துண்டுப் பிரசுரங்களிலும் வெளியிட்ட அனைவருக்கும், மலர்மாலை, மலர்வளையம், அஞ்சலி உரை அளித்த அன்பர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது இல்லத்தில் இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம.

**திருமதி செல்வரத்தினம் குடும்பத்தினர்.**

*வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை.* (80575)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

சமூகத் தொண்டனும் எமது கழகப் போஷகருமாகிய

**திரு. ந.சிவகடாட்சம் J.P**

**சமாதான நீதிவானாக**

நீதி விவகார அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டமைக்கு எமது நல்வாழ்த்துக்கள்.

**ஐக்கிய விளையாட்டுக் கலாச்சாரக் கழகம், கோப்பாய்.**

(80670)

# சேவை நலன் பாராட்டு விழா



**திரு. ந. சிவகடாட்சம்** J.P.

(B.Sc. Dip. in. Edu., S.L.P.S)

**அதிபர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

*போசகர்:*
கோப்பாய் ஐ.வி.கழகம், கோப்பாய் மத்தி.
கோப்பாய் வடக்கு கண்ணகை அம்மன் சனசமூக நிலையம்,
கோப்பாய் வடக்கு சபாபதி நாவலர் சனசமூக நிலையம்,
கோப்பாய் வடக்கு அந்திம சேவைச் சங்கம்.

*தலைவர்:*
பவளவிழாச்சபை, சிவஸ்ரீ வை.மு.பரமசாமிகுருமணி.
பாராட்டுவிழாச்சபை, திரு.S.K. தங்கவடிவேல J.P.

*நிர்மாணிப்புக்குழு:*
தில்லையம்பலப்பிள்ளையார் கோயில், கோப்பாய் மத்தி.

*செயலாளர்:*
கல்வி அபிவிருத்திச் சபை, கோப்பாய்.

*உபதலைவர்:*
அடைப்பந்தாளி வைரவர் கோயில் - கோப்பாய் மத்தி.
ஞானபண்டித சைவ விருத்திச் சங்கம் - கோப்பாய் வடக்கு.

*எண்பார்வையாளர்:*
மக்கள் நலன்காக்கும் பிரிவு - கோப்பாய்,
பலானை கண்ணகை அம்மன் தேவஸ்தானம் - கோப்பாய் மத்தி.

*பத்திராதிபர்:* தொண்டமனாறு வெளிக்கள நிலையம்.

*குழு உறுப்பினர்:*
வடமாகாண அதிபர் சங்கம், அபிவிருத்திச் சபை-
கோப்பாய் வைத்தியசாலை, தேர்வு சபை - யாழ். வலயம்,
கல்வி அபிவிருத்திச் சபை - யாழ். வலயம்.

**இடம்: கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக் கலையரங்கம்**

**காலம்: இன்று (19-11-2000) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணி.**

தலைமை: **திருமதி க.கனகரத்தினம்**
*பிரதி அதிபர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி (விழாக்குழுத் தலைவர்)*

வரவேற்புரை: **திரு. S.K. தங்கவடிவேல்,** J.P
*(விழாக்குழுச் செயலர்)*

ஆசியுரைகள்: **சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக்குருமணி**
**சிவஸ்ரீ ச. தானேஸ்வரக்குருக்கள்**
**அருட்தந்தை தோமஸ் ஜோர்ஜ்**
**அருட்தந்தை பிரான்சிஸ் டானியல்**

வாழ்த்துரைகள்:
**திரு. து. வைத்திலிங்கம்** *(மேலதிக அரச அதிபர்)*
**திரு. க. கேதீஸ்வரன்** *(பிரதேச செயலர், கோப்பாய்)*
**திரு. கோ. சி. வேலாயுதம்** *(முன்னாள் கல்விப்பணிப்பாளர்)*
**திரு. இ. சிவஞானசுந்தரம்** *(உதவிக் கல்விப் பணிப்பாளர்)*
**திரு. க. இராஜதுரை** *(அதிபர், யாழ். மத்தியகல்லூரி)*
லயன் Dr.வை.தியாகராஜா J.P
*(இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவுத் தலைவர்)*
Dr. திருமதி J.ஸ்ரீஸ்கந்தராஜா
*(பல்கலைக்கழக மருத்துவஅதிகாரி)*

மற்றும் பலர் வாழ்த்துரைகள் வழங்குவர்.

* **அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்** *

**- விழாக்குழுவினர்.**

(86656)

# தொழில் நுட்பத்தில் தலைநிமிர 'பயோ ரெக்' தரும் நம்பிக்கை

சமீபத்தில் உறவினர் வீட்டு திருமணத்துக்காக சுழிபுரம் சென்றிருந்தோம். தமிழர்கள் வழக்கப்படி குறிப்பிட்ட நேரம் தாமதமாகியது .அதனால் அருகலிருந்த கடை ஒன்றுக்குச் சென்றோம், ஏதாவது அருந்துவதற்காக.

கடையில் நின்றுகொண்டிருந்த போது இளைஞர் ஒருவரும் அங்கு வந்தார். பார்த்தவுடனேயே அவர் வெளிநாட்டிலிருந்து வந்தவர் என்று புரிந்து கொண்டோம்.

வந்தவர் அருந்துவதற்காகக் கேட்ட குளிர்பானம் எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. வெளிநாட்டிலிருந்து வந்தவர் சகஜமாக ஒரு போத்தல் குளிர்பானத்துக்காக ஆயிரம் ரூபா தாளை நீட்டியவர் அந்நியநாட்டுப் பானத்தைக் கேட்பார் என்றே எதிர் பார்த்தோம். ஆனால் அவர் கேட்டார் 'பயோ ரெக்'கின் 'சாம்ப் - கோலா' தாங்கோ! கடைக்காரர் கொடுக்க வாங்கியருந்தினார் அந்த இளைஞர்.

ஆச்சரியம் தாங்காமல் அவரிடம் கேட்டோம். வெளிநாட்டிலிருந்து வந்த நீங்கள் பெப்சி, கொக்கோலா என்று வாங்குவீர்கள் என்று பார்த்தால் உள்ளூர்த் தயாரிப்பைக் குடிக்கிறீங்கள்! அதற்கு அவர், "மண், சமுதாயம் என்றெல்லாம் கதைக்கிறீங்கள் ஆனால் உள்ளூர் தயாரிப்பு என்றால் இளக்காரமா நினைக்கிறீங்கள்".

நானும் வெளிநாடுகளில் எவ்வளவோ குளிர்பானங்கள் அருந்தியிருக்கிறேன். அவற்றுக்கு எந்த விதத்திலும் குறைவில்லாமல் உள்ளூரில் தயாராகும் 'பயோ-ரெக்' குளிர்பானங்கள் தயாரிக்கப்படுகிறது. அந்நிய மோகத்திலை இருக்கிற நிறையப் பேருக்கு இங்கே இதன் அருமை தெரியவில்லை" என்று விரிவுரையே நடத்தினார். நம்மையறியாமல் கையிலிருந்த அந்நிய நாட்டுக் குளிர் பானத்தை அப்பால் வைத்தோம்.

இளைஞரின் வார்த்தைகள் ஆவலைக் கிளறிவிட திருமணம் முடிந்த கையோடு யாழ்.பல்கலைக்கழகத்தின் அருகே 234, சேர்.பொன்.இராமநாதன் வீதியில் இருந்த 'பயோ-ரெக்' என்று அழைக்கப்படும் சர்வதேச உயிர்நுட்பு நிறுவனத்துக்குச் சென்றோம்.

அங்கே நாம் கண்ட பெரியவர் கூறிய விடயங்கள் நம்மை மேலும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தன.

சுவீடனின் உப்சலா பல்கலைக் கழகம், உருகுவே, பாங்கொக் ஆகிய நாடுகளின் உயர்கல்வி நிறுவனங்கள் போன்றவற்றில் அதிக சம்பளத்துடன் வந்த வேலை வாய்ப்புகளை உதறித் தள்ளிவிட்டு 'என் மண்ணில் சர்வதேச நிறுவனம் ஒன்றை உருவாக்க வேண்டும்' என்று பயோ-ரெக் நிறுவனத்தை பல சிரமங்களின் மத்தியில் உருவாக்கி நடத்திவரும் பேராசிரியர் கே.பாலசுப்பிரமணியம் அவர்கள்தான் நாம் கண்ட அந்தப் பெரியவர்.

நாம் அங்கு தெரிந்துகொண்டதை உங்களுடன பகிர்ந்து கொள்கிறோம்.

'பயோ-ரெக்' நிறுவனம் 1993ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி உயிரியல் செயல்முறை அடிப்படையில் விவசாய மூலங்களை உபயோகிக்க ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 94 ஆம் ஆண்டு மே 13ஆந் திகதி சர்வதேச நிறுவனமாக மாற்றப்பட்டது.

பேராசிரியருடன் நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்தும் மிகக் கடினமான



சர்வதேசத் தரம் மற்றும் தூய்மையுடன் தயாராகும் 'பயோ ரெக்' மென் பானங்கள்.

பணியில் தற்போது கே.பூரணச்சந்திரன், கே.கனகரட்ணம், திருமதி லிங்கா துரைராஜா, திருமதி ஆர்.துரைராஜா ஆகியோர் விடாமுயற்சியுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

குண்டூசியிலிருந்து குதிரைவரை வெளிநாடுகளிலிருந்து கையேந்துபவர்கள் மத்தியில் தேவையான வெளிநாட்டுத் தொழில்நுட்ப உபகரணங்கள் அனைத்தையும யாழ்.குடாநாட்டிலேயே 'பயோ- ரெக்' நிறுவனம் தயாரித்து பயன்படுத்துவது மிகப் பெரிய சாதனைதான்.

இந்த உபகரணங்களைக் கொண்டு குடாநாட்டில் இயங்கும் வெதுப்பகங்களுக்கு மாவைப் புளிக்க வைக்கத் தேவைப்படும் மதுவம் (BEKER'S YEAST), இனிப்பு உற்பத்தியாளர்களுக்குப் பயன்படும் திரவ குளுக்கோஸ் ஆகியவற்றைத் தயாரித்து 'பயோ-ரெக்' விநியோகித்தது.

காகிதத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நொதியம், எரிபொருளுடன் கலநது வாகனங்களைச் செலுத்தக்கூடிய எரிபொருள் எதினோல், உள்ளிட்ட பல தயாரிப்புகளை நமது மண்ணிலேயே அந்நியர் உதவியின்றி உற்பத்தி செய்ய முடியும் என்று நிரூபித்தும் காட்டியுள்ளது 'பயோ-ரெக்'.

மேற்கூறப்பட்ட எல்லாத் தயாரிப்புகளுக்கும் உள்ளூரில் விளையும் அரிசி, சோளம் முதலியவற்றையே இவர்கள் பயன்படுத்தியது தமிழரின் தளராத உழைப்புக்குச் சான்றாகும்.

'பயோ - ரெக்'கின் தயாரிப்புகளில் சிகரம் தொட்டவை பயோ-ரெக் குளிர்பானங்கள், பியர் மற்றும் வைன் வகைகள்.

குடாநாடு சொந்த முகத்தோடு இருந்த 95 வரை 'பயோ - ரெக்'கின் தயாரிப்புகள் குடாநாட்டு மக்களின் தாகத்தைத் தணித்து வந்தன.

மண்ணின் முகம் மாறியதுடன் அந்நிய நாட்டு அலங்காரங்களால் இவற்றின் பெருமையும், அவசியமும் மறக்கடிக்கப்பட்டது கவலைக்குரியதே.

ஆனாலும் எத்தனை இடர்கள் இடறியபோதும் இலட்சியத்தைக் கைவிடாத 'பயோ - ரெக்' தற்போது சர்வதேசத் தரத்துடன் பல சுவைகளில் குளிர்பானங்களைத் தயாரித்து விநியோகிக்கின்றது. அவற்றில் சாம் கோலா, ஒரேஞ்ச், நெக்டா, ஜிஞ்சர் பியர், பிளேன் சோடா ஆகியன அடங்கும். அதிலும் ஜிஞ்சர் பியருக்குப் பயன்படுத்தப்படும் உயர்தர இஞ்சிச் சாறு நமது மண்ணில் விளையும் இஞ்சியிலிருந்து இங்கேயே தயாரிக்கப்படுகிறது என்பது கூடுதல் சிறப்பு.

'பயோ-ரெக்' தனது தயாரிப்புகளில் சுத்தம், தரம் இவை இரண்டையும் உயிர் போல் உயர்நிலையில் காத்துவருகிறது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வேண்டிய தாதுக்கள் கலந்த குடிதண்ணீரை (MINERAL WATER) பயோ-ரெக் நிறுவனத்திடம் இருந்து பெற்றுக் கொண்டதே இவர்களின் தரத்துக்கும், தூய்மைக்கும் போதுமான சாட்சியம்.

சர்வதேச தரத்துக்கு இணையான 'பயோ-ரெக்' குளிர்பானங்கள் வரிசையில் புதிய வரவாக உள்ளது 2 டிகோலா. இனிப்பான குளிர்பானங்களை ரசித்துக் குடிப்பவர்களை ஏக்கத்துடன் பார்க்கும் சர்க்கரை வியாதிக்காரர்களின் ஆவலை பூர்த்தி செய்யவே 2 டிகோலா தயாரிக்கப்படுகிறது. இனிப்பு உட்கொள்ளுவதால் ஏற்படும் எந்தப் பாதிப்புகளும் 2 டிகோலா அருந்துவதால் வராது என்ற உத்தரவாதத்துடன் இதனை விற்பனைக்கு விடுகிறது 'பயோ-ரெக்'. ஆகவே இதனை அருந்தினால் இரத்தத்தில் குளுக்கோஸ் கூடாது; சிறுநீரில் சீனி வராது. அத்துடன் 2 டிகோலாவில் அழகின் ரகசியமும் அடங்கியுள்ளது.

ஆம் 2 டிகோலாவில் உள்ள இரு 'டி'களில் ஒன்று 'டயபடீஸ்' (Diabetes) என்ற சர்க்கரை வியாதியைக் குறிக்கிறது. மற்ற 'டி' டயட் (Diet) என்பதைக் குறிக்கிறது. 2 டி கோலாவை அருந்துவதால் உடலில் தீங்கு விளைவிக்கும் அதிகப்படியான கொழுப்புக் கரைந்து உடல் அழகாகும் என்று 'பயோ - ரெக்' நிறுவனம் தெரிவிக்கின்றது. இதனை அருந்தினால் இரத்தத்தில் கொலொஸ்ரோல் அதிகரிக்காது.

குளிர்பானங்களுடன் மட்டும் நின்று விடாமல் தனது பார்வையை மருத்துவத்துறையின் பக்கமும் திருப்பியுள்ள பயோ-ரெக் சர்க்கரை வியாதி உடையவர்கள் தமது சிறுநீிலுள்ள சர்க்கரையின் அளவை வீட்டிலிருந்தே சிறிய பரிசோதனை மூலம் தெரிந்து கொள்ள உதவும் 'பெனடிக்' கரைசலையும் தயாரித்து விற்கிறது.

கொழும்பிலிருந்து கொண்டு வரப்படும் 'பெனடிக்' கரைசலின் விலையை விடக் குறைந்த விலைக்கே இதனை பயோ - ரெக் விற்பனை செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நாளைய வாழ்க்கையில் தமிழர் தலை நிமிர்ந்து வாழலாம் என்று 'பயோ-ரெக்' தந்த தன்னம்பிக்கையுடன் வெளியே வந்து போது அருகில் இருந்த யாழ்.பல்கலைக்கழகம் கண்ணில் பட்டது. கூடவே ஓர் எண்ணமும் மனதில் உதித்தது.

பல்கலைக்கழகத்தில் நடைபெறும் விழாக்களில் பரிமாறப்படும் அந்நிய நாட்டுப் பானங்களுக்குப் பதிலாக உள்ளூர்த் தயாரிப்புகள் பரிமாறப்பட்டால்.....

# வேகமாகப் பரவிவரும் 'பாத்தீனியம்' பயிர்ச் செய்கைக்கு பெரும் அச்சுறுத்தல்

## ஆக்கிரமிப்புக் களையை அழிப்பது எப்படி?

யாழ்.மாவட்டத்தில் 'பாத்தீனியம்' களை மிக வேகமாகப் பரவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இக் களை தரிசான நிலங்களிலும் தெரு வோரங்களிலும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படும் நிலங்களிலும் பெரும் அளவில் காணப்படுகிறது. புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி, உரும்பிராய், கோப்பாய், இராஜவீதி, மருதனார்மடம், உடுவில் போன்ற இடங்களில் மிக அதிகளவில் இவற்றைக் காணலாம். இது மற்றைய இடங்களிலும் பரவலாகக் காணப்படுகிறது. இக்களையைப் பெருகவிட்டால் பயிர்ச்செய்கைக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்படும். எனவே இக்களையைக் கட்டுப்படுத்துவதில் விவசாயிகள் மட்டுமல்ல, அனைத்துப் பொதுமக்களும் அக்கறை காட்ட வேண்டியது மிக அவசியம் ஆகும்.



### களையை அடையாளம் காணல்

இந்தக்களை 50-150 ச.மீ உயரம் வரை வளரும் வளம் குறைந்த மண்ணிலும் வருடம் முழுவதும் வளரக் கூடியது. இலைப்பரப்பு அதிகளவில் பிரிந்திருப்பதோடு செவ்வந்தி பூச்செடியின் இலையின் அமைப்பை ஒத்திருக்கும். இதன் இலைப்பரப்பிலும், தண்டிலும் ரோமங்கள் காணப்படும்.

இது முளைத்து 4-6 வாரங்களின் பின் நுனியில் அனேக எண்ணிக்கையில் சிறிய வெள்ளை நிறப் பூக்கள் காணப்படும்.நன்கு வளர்ந்த தாவரம் ஒன்று 15 ஆயிரம் விதைகள் வரை உற்பத்தி செய்யும்.

### களையினால் ஏற்படக்கூடிய தீமைகள

1. இந்தக் களையினுடைய பூவிலிருக்கும் மகரந்த மணிகள் ஏனைய பயிர்களில் கருக்கட்டலையும், காய் உருவாகுதலையும் தடை செய்கிறன.

2. இக்களையில் அடங்கியுள்ள 'பாத்தீனின்' என்ற இரசாயனப் பொருள் மண்ணில் சேருவதனால் மற்றைய பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்படும். இதனால் விளைச்சல் 30% - 40% வரை குறையலாம்

3. இக்களையினால் மனிதர்களுக்குப் பல ஆரோக்கிப் பிரச்சினைகள் ஏற்படலாம். இக்களையின் தண்டு, இலைகள் என்பன தோலில் படுவதால் ஒவ்வாமை ஏற்படும். கடுமையான தோல் அலற்சியை உண்டாக்கும். இதன் மகரந்த மணிகள் சுவாசத் தொகுதியில் ஒவ்வாமையை ஏற்படுத்தும்.

4. மாடு, ஆடு என்பன இதனை உண்பதால் அவ் விலங்குகளுக்கும் பல நோய்கள் ஏற்படலாம்.

### களை பரவும் முறை

இந்தக் களைகள் சிறிய விதைகள் மூலம் பரவுகின்றன விதைகள் காற்று, நீர், மண், இயந்திரங்கள், கால்நடைகளின உரோமம், பாதங்கள், கால் நடைகள் உணவாக எடுக்கும்போது அவற்றின் மலம் மூலம் பரவல் அடைகின்றன.

### கட்டுப்படுத்தும் முறை

1. பூக்கள் உருவாகுவதற்கு முன்னர் மண்வெட்டியால் கொத்தி, எரித்து விடுதல்.

2.பூக்கள் உருவாகுவதற்கு முன்னர் "கிளைபோசேட்" களை நாசினியை தாவரம் நன்கு நனையும் வரை விசிறுதல்.

3. பூக்கள், விதைகள் உள்ள களைகளை வேறு பயிர்களுடன் ஏனைய இடங்களுக்குக் கொண்டு செல்வதைத் தவிர்த்தல்.

4. களை காணப்படும் பிரதேசங்களிலிருந்து வேறு இடங்களுக்கு மண் கொண்டு செல்வதைத் தவிர்த்தல்.

எனவே இந்தக் களை முற்றாக அழியும் வரை தொடர்ந்து மேற்குறிப்பிட்ட கட்டுப்படுத்தும் முறைகளை கடைப்பிடிக்குமாறு சகலரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இதனால் நமது பிரதேசத்தில் ஏற்படக்கூடிய பாரிய தாக்கங்களை முற்றாக நீக்கலாம். ☆

**ச.சின்னத்துரை**
(உதவி விவசாயப் பண்ணையாளர் (விரிவாக்கம்), யாழ்ப்பாணம்.


ஜெயல் அக்கடமி
உதவி அரசாங்க அதிபர் பணிமனை வீதி, சண்டிலிப்பாய்.

பரிசளிப்பு விழாவும் கலை விழாவும்~2000

இடம்:- கல்வீ நிலைய முன்றல்
காலம்:- இன்று (2000-11-19) ஞாயிற்றுக்கிழமை பி.ப

தலைவர்:- திரு V.N. பத்மநாதன் (நிர்வாகி)

பிரதம விருந்தினர்:- திரு.நா.வேதநாயகன் (உதவி அரசாங்க அதிபர், சண்டிலிப்பாய்)

சிறப்பு விருந்தினாகள்:- திரு T.வேல்நம்பி (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)

திரு A.கமலாகரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - தீவகம்)

திரு S.சிவனேஸ்வரன் (அதிபர் - யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

கலை நிகழ்ச்சிகள்:
* மாணவர் கலை நிகழ்ச்சிகள்
* ஆசிரியர் கலை நிகழ்ச்சிகள்

சிறப்பு நிகழ்ச்சி : பட்டிமண்டபம்

பொருள்: சமுதாய பாரம்பரியத்தைக் கட்டிக் காப்பதில் பெரிதும் பங்கெடுப்பவர்கள்

ஆண்களா?
ந.கணேசமூர்த்தி
S.ஜெயக்குமார்
S.கண்ணன்

பெண்களா?
V.M.லிங்கம்
E.S.பவன்
S.சந்திரன

நடுவர்: திரு.T.வேல்நம்பி (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகி
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(C/13891)

புதிய கல்வியாண்டு 2001
ஆரம்பம் : 2000-12-09 சனி பி.ப 4.00 மணி.

# நினைவகலாப் பதினாறாம் நாள்



## அமரர்
## கணேசரத்தினம் பாலச்சந்திரன்

(பெரியகணேசா சந்திரன் - அளவெட்டி)

**விக்கிரம ஐப்பசி மேவுசனி பத்தொன்பான்
புக்கதிதி அட்டமி பூர்வபக்கம் – மிக்க
புகழ்ப்பாலச் சந்திரன் பொங்குதிருத் தில்லைப்
பகவனடி சேர்ந்த பகல்.**

நல்ல நாதஸ்வரத்தில் சிறந்த மேதை
ஞானமெலாம் பாராட்டும் குணம் படைத்தாய்
வெல்லுமிசை நுணுக்கங்கள் வல்லாய் எம்மை
விட்டகன்றாய் பாலச்சந்திரப் பேராளா!
எல்லையிலாத் துயரில் மனம் குமுறுகின்றோம்
இறைவனது திருவடிக்கீழ் இன்ப மெய்தி
அல்லும் பகல் எமைக்காக்கும் தெய்வமாக
ஐயனே கலங்காமல் காப்பாய் ஐயா!

இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயுற்றிருந்த வேளையில் அன்புடன் சிகிச்சை அளித்து உதவிய ஒன்பதாம் விடுதி வைத்திய கலாநிதிகளுக்கும், தாதியர், ஊழியர் அனைவருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் எமக்குதவிய அன்பு உள்ளங்களுக்கும் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு மரணச் செய்தியைக் கேள்வியுற்று நேரில் வந்து அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்தோருக்கும் தொலைபேசியில் ஆறுதல் கூறியோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோருக்கும் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (19-11-2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்:
**மனைவி, மக்கள், உறவினர்கள்.**

*சங்கானை வீதி, அளவெட்டி.* (C/13890)

# 'ஈழகேசரிக்கு' உறுதுணையாகி அதனை வளர்த்தெடுத்த முதல்வர்

**சிற்பி**

**அண்மையில் லண்டனில் காலமான வானொலிக் கலைஞரும் பத்திரிகையாளருமான சோ.சிவபாதசுந்தரத்தின் காத்திரமான பணிகளை ஆராயும் இக்கட்டுரையின் முதற்பகுதி கடந்த ஞாயிறன்று உதயனில் வெளியாகி இருந்தது. அதன் எஞ்சிய பகுதி இங்கே பிரசுரமாகின்றது. 'மறுமலர்ச்சி' (மே 1999) இதழில் இக்கட்டுரை வெளியாகி இருந்தது.**

நூல்களின் உள்ளடக்கத்தைக் கவனித்து, அதை நடுநிலையில் நின்று விமர்சிக்கும் தகுதியும் திறனும் உடையோரைத் தெரிவுசெய்து அவர்களைக் கொண்டு விமர்சனங்களை எழுதுவித்து வெளியிட்ட சோ.சி., தானும் பல நூல்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் விமர்சனங்களை எழுதினார்.

வ.ரா.வின் இலக்கியக் கொள்கையையும் அவருடைய எழுத்து நடையையும் பெரிதும் மதித்தவர் சிவபாதசுந்தரம். ஆனால் வ.ரா.எழுதிய 'மகாகவி பாரதியார்' என்ற நூலை விமர்சித்தபோது "இப் புத்தகத்தின் தலைப்புப் பெயருக்கும் நூலுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதுதான் என் அபிப்பிராயம். 'சுதந்திர வீரர்' பாரதியைப் பற்றித்தான் வ.ரா. மிக அழகாக எழுதியிருக்கிறாரல்லாமல், மகாகவி பாரதியாரைப் பற்றி எழுதவில்லை" எனக் குறிப்பிட்டார். இவருடைய விமர்சன நேர்மைக்கும் தன் கருத்தை நயமாக வெளியிடும் திறமைக்கும் இது சான்று.

சோ.சி.தொடக்கிவைத்த இந்த விமர்சனப் பணி, 'நமது வாசிகசாலை' என்ற பெயரில் 'ஈழகேசரி' யின் இறுதி இதழ்வரை தொடர்ந்தது.

ஆண்டுதோறும் இந்தியாவுக்கு இலக்கிய யாத்திரையை மேற்கொண்டு அங்குள்ள எழுத்தாளர்களையும் பத்திரிகை ஆசிரியர்களையும் சந்தித்து உரையாடி, அந்த அனுபவங்களை 'ஈழகேசரி' வாசகர்களுடன் இவர் பகிர்ந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

"பத்திரிகைக்கு எழுதுவதைப் பொழுது போக்காக வைத்துக் கொண்டிருந்த நான், 1938 இல் 'ஈழகேசரி' யின் பிரசுரத்தைக் கவனிக்கச் சென்ற போதுதான் எழுத்துத் தொழிலின் இன்பத்தை உணர்ந்தேன். மூன்று நான்கு வருஷம் அது ஒரு யோக சாதனை. எழுதி எழுதி பேனா முனை தேய்ந்தது. எழுத்தாளன் என்ற சொல்லுக்கு நீங்கள் என்ன பொருள் கொள்வீர்களோ எனக்குத் தெரியாது. அந்தக் காலத்தில் புதுமைப்பித்தனும், கு.ப.ராசகோபாலனும் வ.ராவும் கல்கியும், கி.வா.ஜ.வும், தேசிகவிநாயகம்பிள்ளையும் என் 'சொந்தக்காரர்' ஆனார்கள். (எழுத்துலகில் நான் - கலைச்செல்வி) என மகிழ்ச்சிப் பூரிப்புடனும் 1938 முதல் 1942 வரையுமுள்ள நான்கு வருஷ காலம் என் வாழ்வில் மறக்க முடியாத பொற்காலம். இன்று நான் பெற்ற பதவிக்கே (இலங்கை வானொலியில் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாக இருந்த போது எழுதப்பட்டது.) 'ஈழகேசரி' கொடுத்த அனுபவம் தான் காரணம் என நன்றி கலந்த அடக்கத்துடனும் "நான் 'ஈழகேசரி'யில் கடமையாற்றிய காலத்தில் இளைஞர்களுக்கென ஒரு கல்வி அனுபந்தம் நடத்தி வந்தது வாசகர் சிலருக்கு ஞாபகம் இருக்கலாம். அந்த அனுபந்தத்தில் மாணவர்களாயிருந்து எழுதிய இளம் எழுத்தாளர்கள் சிலர் இன்று ஈழநாட்டின் சிறந்த எழுத்தாளராய் மிளிர்கின்றனர்." (கனக செந்திநாதன் எழுதிய 'ஈழம் தந்த கேசரி' - பக்.78,79) என மனநிறைவுடனும் கூறுகின்றார் சிவபாதசுந்தரம்.

"அன்பர் சோ.சி.அவர்களும் ஒவியக் கலைஞர் சானா அவர்களும் 'கல்கி'யும் 'மாலி'யும் போல வாழ்ந்து இந்தக் காலத்தில் அருமையான ஆண்டு மலர்களையும் வெளியிட்டு 'ஈழகேசரி'யைத் தரமான அரசியல், இலக்கிய, கலைப் பத்திரிகையாக உயர்த்தினார்கள்; இளம் எழுத்தாளர்களைத் தோற்றுவித்தார்கள்" என்பது கனக செந்திநாதனின் மதிப்பீடு. (ஈழம் தந்த கேசரி: பக்.79)

'ஈழகேசரி'யில் வெளியான 513 சிறுகதைகளையும் வாசித்து அவற்றில் சிறந்தவற்றைத் தொகுத்து நூலாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள செங்கை ஆழியான், "நவீன இலக்கியத்தின் வருகைக்கும் செழுமைக்கும் 'ஈழகேசரி' தன் கதவுகளை அகலமாகத் திறந்து விட்டிருந்தது. பெரும்பாலான நாவல்களும் சிறுகதைகளும் ஆக்கத் திறனும் இந்த மண் சார்ந்த பிரச்சினைகளைக் கருப்பொருளாயும் கொண்டிருந்தன. தமிழ் மக்களிடையே உள்ள மூட நம்பிக்கைகள், சாதிய அடக்கு முறைகள் ஆகியவற்றுக்கு எதிராகவும் ஆலய பிரவேசம், சமகல்வி வாய்ப்பு ஆகியவற்றுக்கு ஆதரவாகவும் பல கதைகள் அமைந்துள்ளன" எனக் குறிப்பிடுகின்றார்.

1938 - 42 ஆண்டுக் காலத்தில் 'ஈழகேசரி'யில் வெளியான கதைகளை வாசிப்போர் எத்துணை அகலமாகச் சோ.சிவபாதசுந்தரம் அந்தக் கதவுகளைத் திறந்து வைத்தார் என்பதையும் உணர்வர்.

1956 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை அடுத்தே இலங்கையில் தேசிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டதென்றும் அப்போது தம்மால் முன்வைக்கப்பட்ட தேசிய இலக்கியக் கோட்பாட்டை உணர்ந்த பின்னரே இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் இந்த நாட்டு மண்வாசனை கமழும் கதைகளை எழுதத் தொடங்கினார்கள் என்றும் விடாப்பிடியாகக் கூறி வருபவர்களுக்கு "40 க்குப் பின், 47க்குப் பின், 56க்குப் பின் என்றெல்லாம் தாங்கள் எழுத்தாளர்களாக வந்த காலத்தை வைத்துக்கொண்டே இலக்கிய வளர்ச்சிக் கணக்குப் போடும் யாராயிருந்தாலும் 'ஈழகேசரி'யையும் அது செய்த பணியையும் இலகுவில் தட்டிக் கழிக்க முடியாது" எனக் கனக செந்திநாதன் (ஈழம் தந்த கேசரி: பக்.87) உறுதியாகக் குறிப்பிட்டதை நினைவூட்ட விரும்புகின்றேன்.

மகாகவி பாரதியாருடன் தமிழ் இலக்கிய உலகில் ஏற்பட்ட மறுமலர்ச்சியை இலங்கைத் தமிழ எழுத்தாளர்களும் அறிஞர்களும் மனப்பூர்வமாக வரவேற்றார்கள். இலங்கைச் சூழலுக்கு இசைவாக அந்த மறுமலர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல முயன்றவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது 'ஈழகேசரி'. இப்பணியில் அதற்கு உரமூட்டி உறுதுணையாக இருந்தவர் - விழிப்புடன் இருந்து வளர்த்தெடுத்த முதல்வர் சோ.சிவபாதசுந்தரம் என்பது மறுக்க முடியாத உண்மை.

சோ.சி. பத்திரிகையாளர் மட்டுமல்லர்; ஆற்றல் வாய்ந்த இலக்கிய கர்த்தாவும், கலை இலக்கிய விமர்சகரும் சிறந்த ஒலிபரப்பாளரும் ஆவார்.

தோட்டத்து மீனாட்சி, அழைப்பு, எட்டாந் திருவிழா, சங்கு வளையல், காஞ்சனை, எப்போ காண்பேன், பொன்னர் சொன்ன கதை, பரதேசி, நண்பர்கள், வைரவ கோயில விளக்கு, பரிசுக் கட்டுரை முதலிய சிறுகதைகளை எழுதியுள்ளார். காஞ்சனை என்ற கதை, கதைக்கோவையில் இடம்பெற்றுள்ளது.

புத்தமார்க்கம், வசந்தமாலா, ஒத்திகைக்கு முன்னும் பின்னும் ஆகிய இவரது வானொலி நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை.

மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில், சேக்கிழார் அடிச்சுவட்டில், கௌதம புத்தர் அடிச்சுவட்டில் ஆகியவை, பக்திச் சுவையுடன் பயண அநுபவங்களை விவரிக்கும் புதுமையான நூல்களாகும். மூதறிஞர் ராஜாஜியாற் பாராட்டப்பட்டது இவர் எழுதிய 'ஒலிபரப்புக் கலை' பெ.கோ.சுந்தரராஜனுடன் (சிட்டி) இணைந்து இவர் எழுதிய 'ஒரு நூற்றாண்டு காலத் தமிழ் நாவல் வளர்ச்சி' சம்பந்தமான நூல் பல்வேறு விதமான தகவல்களைக் கொண்ட ஆராய்ச்சி விமர்சனமாகும்.

ஈழகேசரி ஆசிரியராக இருந்து நவீன இலக்கிய வளர்ச்சிக்கு சோ.சிவபாதசுந்தரம் ஆற்றிய ஆக்க பூர்வமான பணிகளை - பிற்கால இலக்கிய விமர்சகர்களாலும் இலக்கிய வரலாற்றை எழுத முனைந்த சிலராலும் மறைக்கப்பட்ட - அல்லது மறக்கப்பட்ட அல்லது அறியாமையோ அக்கறையின்மையோ காரணமாகக் குறிப்பிடப்படாமல் விடப்பட்ட - அவருடைய பங்களிப்பை ஆதாரபூர்வமாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாதலால் அவருடைய ஏனைய சாதனைகள் இங்கே விரிவாக ஆராயப்படவில்லை. ★

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை

2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், 2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் வெற்றியீட்டிய மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

### புலமைப்பரிசில் பரீட்சை

உ. சகானா - 174 | ச.குகசீலன் - 151 | தெ.பவனுஜா - 141

### தமிழ்த்திறன் போட்டி

| | | | | |
|---|---|---|---|---|
| உ.சகானா | தரம் 5 | பேச்சு | மாவட்டம் | 1 ஆம் இடம் |
| சு.ஜஷ்மினா | தரம் 5 | கதைகூறல் | மாவட்டம் | 3 ஆம் இடம் |
| சி.விந்துஜா | தரம் 4 | பாவோதல் | கோட்டம் | 1 ஆம் இடம் |
| ச.வாசுகி | தரம் 4 | எழுத்தாக்கம் | கோட்டம் | 2 ஆம் இடம் |
| சி.சிவாஞ்சலி | தரம் 5 | இசையும் அசைவும் | கோட்டம் | 2 ஆம் இடம் |
| ம.கஸ்தூரி | தரம் 4 | தனிநடனம் | கோட்டம் | 3 ஆம் இடம் |

### ஆங்கில தினப் போட்டி

| | | | | |
|---|---|---|---|---|
| க.உஷாந்தன் | தரம் 3 | வாசிப்பு | மாவட்டம் | 2 ஆம் இடம் |
| செ.துளசிகா | தரம் 3 | உறு.எழுத்து | கோட்டம் | 3 ஆம் இடம் |
| ம.கஜிதாப் | தரம் 3 | பாவோதல் | கோட்டம் | 2 ஆம் இடம் |
| சி.தீபிகா | தரம் 4 | பாவோதல் | வலயம் | 1 ஆம் இடம் |
| க.யஸ்மிலா | தரம் 4 | பாவோதல் | கோட்டம் | 2 ஆம் இடம் |
| உ.சகானா | தரம் 5 | பாவோதல் | மாவட்டம் | 1 ஆம் இடம் |
| ஞா.கார்த்திகா | தரம் 5 | பாவோதல் | கோட்டம் | 3 ஆம் இடம் |
| செ.டிலானி | தரம் 5 | வாசிப்பு | கோட்டம் | 2 ஆம் இடம் |
| ம.கஸ்தூரி | தரம் 4 | உறு.எழுத்து | கோட்டம் | 1 ஆம் இடம் |
| உ.சகானா | தரம் 5 | உறு.எழுத்து | கோட்டம் | 3 ஆம் இடம் |

### ஏனையவை

| | | | | |
|---|---|---|---|---|
| உ.சகானா | தரம் 5 | திருக்குறள் மனனம் - வலயம் | | 3 ஆம் இடம் |
| க.யஸ்மிலா | தரம் 4 | திருக்குறள் மனனம் - கோட்டம் | | 2 ஆம் இடம் |
| வா.நிசாந்திகா | தரம் 4 | திருக்குறள் மனனம் - கோட்டம் | | 3 ஆம் இடம் |
| தெ.பவனுஜா | தரம் 5 | பண்ணிசை (சைவபரிபாலனசபை, இணுவில் இளந்தொண்டர் சபை) | | 1 ஆம் இடம் |
| க.உஷாந்தன் | தரம் 3 | சைவ சமய பாடப்பரீட்சை | அம்பாள் கழகம் | விசேட சித்தி |
| க.யஸ்மிலா | தரம் 4 | சைவ சமய பாடப்பரீட்சை | அம்பாள் கழகம் | விசேட சித்தி |

இவற்றுக்கெல்லாம் தோன்றாத் துணையாய் நின்று அருள் பாலித்து நிற்கும் மருதடி விநாயகரின் பாத மலர்களை வணங்குகின்றோம்.

- பெற்றோர்.

விளம்பர அன்பளிப்பு: **தர்மரூபன் தொலைத் தொடர்பு,**
போட்டோ பிரதி, பக்ஸ் சேவை. இல.3201
மானிப்பாய்.

(80630)

# பாராட்டுகின்றோம்

## கௌரவ டக்ளஸ் தேவானந்தா

**வடபகுதி அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு,
இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர்.**

1997 ஆம் ஆண்டிற்கான தடைப்பட்டிருந்த இடர்காலக் கொடுப்பனவு சம்பந்தமாக எம்மால் தங்கள் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நிதானத்துடன் ஏற்று அதற்கு காலதாமதமின்றி உடனடிப் பரிகாரம் கொடுத்த தங்களின் செயற்றிறனும், மனிதாபிமானமும் நிறைந்த செயற்பாட்டிற்கு எங்கள் அளப்பரிய நன்றிகளும் பாராட்டுதல்களும்.

விரிவுரையாளர்கள்,
சக ஊழியர்கள்,
**தொழில்நுட்பக் கல்லூரி.**

*பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.*

(80563)

| | | | |
|---|---|---|---|
| | சனி | வியா | ரா |
| | இராசிச் சக்கரம் | | சந் |
| | | | |
| கே வெ | சு ▼ | புத | செவ் |

# இந்த வார இராசி பலன்

## 18-11-2000 - 24-11-2000

**மாற்றம் :-**

***18 - 11 - 2000 இல் ஆயிலியம் - சந்திரன் கடகம் இராசியில் நிற்கும்.***

அரசியலில் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும். கருத்து மாற்றம் ஒப்பந்த அடித்தள விஷயங்கள் ஆராயப்படலாம். மாற்றங்கள் சகஜம். இந்தியாவில் வடக்கில் புதிய பிரச்சினைகள் தோன்றும். அரசியல் வாதிகளிடையே கருத்து வேற்றுமைகள் ஏற்பட இடமுண்டு. மேற்கு நாடுகளின் உதவிகளால் கிழக்கு நாடுகளில் புதிய திட்டங்கள் தொழில்நுட்ப ஆக்கங்கள் உருவாக இடமுண்டு. மத்திய கிழக்கில் புதிய நெருக்கடிகள் தோன்றும். சமாதானப் பேச்சும் நடக்கும். இயற்கையின் தாக்கம் மழை. அமுக்கத்தால் சில இடங்களில் காற்றால் அழிவுகள் ஏற்பட இடமுண்டு எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

காற்று ஒருவருக்கா வீசுகிறது? எல்லோருக்கும் தானே வீசுகின்றது. பொதுவான கருத்து — பொதுவான செயற்பாட்டில் — எல்லோரும் நன்மை அடையலாம் தானே. தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி கொதித்தெழுவதனால் உங்களுக்கு நல்ல தல்ல. மாற்றங்கள் ஏற்படும். காணி பூமி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வர இடம் உண்டு. வாகனச் செலவுகள் அதிகரிக்கும். வீண் கருத்து வேற்றுமைகள் ஏற்பட இடம் உண்டு. சிரசு வருத்தம், வாய்வுத் தொல்லை, நரம்புச் சோர்வு, தோல்வருத்தங்கள் வர இடமுண்டு. வெள்ளைப் பூடு, வெங்காயம், பெருங்காயம் சேர்த்தால் நன்று. இயந்திரத்துறை, கட்டடப் பொருள் விற்பனை, நிர்வாகத்துறையினர்கள் எண்ணெய் கமிஷன் தொழில் செய்பவர்களுக்கு அதிக மாற்றங்கள் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:-திங்கள், புதன், வெள்ளி.

### இடபம்

கடல் கொந்தளிப்பது காற்றும் அமுக்கமும் சேரும் பொழுதுதான். எனவே இக்காலத்தில் அவதானமாக இருந்து செயற்படுவது உங்களின் கடமையாகும். மனதில் கொந்தளிப்பு வேதனை வந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் தொழில் ஸ்தானத்தில் செயற்பட்டு வருவீர்கள். மற்றவர்களுக்கு துரோகம் செய்ய எண்ணாதீர்கள். குடும்பச்சிறப்பு, சுபகாரிய நிறைவு, சகோதரங்களுக்கு உதவிகள் ஆடை, நகைகள் வாங்க யோசனை கருத்துவேற்றுமைகள் என்பன வரும். முதுகுவலி, தலைவலி, திடீர்ப் பிரச்சினை, மனவேதனை வரலாம். காயங்கள். வரலாம். கொத்தமல்லி, சுக்குத்தூள் பாவிக்கவும். சட்டத்துறை, மருந்துத்துறை, இசை ரீவித்துறை, ஹோட்டல்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.

### மிதுனம்

உலகம் விஷபீடைகளால் நெருக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுதல், விஷ வார்த்தை, நச்சுக்குண்டுத் தாக்குதல்கள் என்பனபரவிய படி இருக்கின்றன போலிருக்கின்றது. எனவே தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் பொறுமையுடன் செயற்படுங்கள். காசுவரும். சகோதரங்களுடன் வாக்குக்கலகம் கொடுக்கும். எதிர்ப்பு, எதிரிகளைச் சாதுரியமாக வெற்றி கொள்வீர்கள். அரசியல் வாதிகளின் உதவிகள் கிடைக்கும். பித்தக் கொதிப்பு, வாய்வுத்தொல்லை, வயிற்று வருத்தங்கள் வரலாம். வெந்தயம், பெருங்காயம், கச்சான் கடலை உணவில் சேர்த்துக் கொள்ளவும். நீதித்துறை, ஆசிரியத்துறை, வியாபாரத் துறையினர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன். வியாழன், வெள்ளி.

### கடகம்

அன்புதான் உலகமகாசக்தி. ஆனால் உண்மை அன்புதான் வரமாட்டாது போலிருக்கின்றது. தொழில் ஸ்தானத்தில் எப்படியாவது பணம் வருமா? என அடிக்கடி சிந்திப்பீர்கள். உங்களைக்கண்டு எல்லோரும் ஒடி ஒழிப்பர்; அது ஏன்? இடமாற்றங்கள் சிலருக்கு ஏற்படலாம். அடிக்கடி மனப் பதற்றநிலை, அமைதியற்ற சிந்தனை, வீண்பிரச்சினைகள் என்பன வர இடம் உண்டு. உணர்வுகள், வயிற்று வருத்தங்கள், சலவருத்தம், நெஞ்சுநோ. கைகால் விறைப்பு என்பன வரலாம். வெந்தயம், முருங்கையிலை என்பன சேர்க்கவும். குருத்துறை, பிரயாணத்துறை, அரசியல்துறை, செய்தித் துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்

★ அதிர்ஷ் நாள்கள்:- புதன் வியாழன், வெள்ளி.

### சிங்கம்

உண்மைகள் திடீரென வெளிவரமாட்டாது. ஆனால் நீங்கள் பல கஷ்டங்கள் பட்டுத்தான் உயர் நிலையை அடைந்து வந்துள்ளீர்கள். காலம் தாழ்த்தி வந்தாலும் கருத்துடன் வருவதை ஏற்றுக்கொள்வீர்கள் தொழில் ஸ்தானத்தில் நல்லதைச் செய்த படி இருப்பீர்கள். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் அடிக்கடி பதற்றம், நாரிப் பிடிப்பு, தொண்டை வரட்சி, கண்கூச்சம் என்பன வரலாம். குடும்பத்தில் கருத்து வேற்றுமை வரலாம். மாமன், மாமி, மைத்துனர் வழியினரிடமிருந்து சிலருக்கு நற்செய்திகள் வரலாம். நிர்வாகத் துறை, மருந்துத்துறை, குருத் துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள். பொன்னாங்காணி, பால் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்

★ அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.

### கன்னி

காத்திருந்து, காத்திருந்து காலமெல்லாம் வீணாகின்றதே என ஏங்குகின்றீர்களா? வாழ்க்கையில் உயர் பதவி கல்விநிலை அடைய வேண்டுமாயின் மிகுந்த பிரயாசைப்பட வேண்டியது உங்கள் கடமையல்லவா? மனிதர்கள் உச்சக்கொப்பில் ஏற நினைத்து திடீரென முறிந்து விழுந்துவிடாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும். தொழில் ஸ்தானத்தில் நல்லதைச் செய்வீர்கள். சகோதரங்களுக்குப் பாதிப்புக்கள் வரலாம். சிரிப்பதனால் மனித மனவேதனைப்பாரம் ஓரளவு குறைந்துவிட இடமுண்டு இப்பொழுது சின்னவர்கள், பெரியவர்களை அதட்டி, வெருட்டிக் காரிய மாற்றும் காலமாச்சே பொறுமையாக நடவுங்கள் கோபிக்காதீர்கள், கிருமித் தாக்கம், கைகால் பிடிப்பு, இரத்த நோய்கள் என்பன வர இடமுண்டு. குருத்துறை, ரீ.வி. கம்பியூட்டர். மின்சாரத்துறை, பாதுகாப்புத் துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்;- திங்கள், புதன், வெள்ளி.

### துலாம்

பாதுகாப்பு இல்லாத இடத்திலும்—சுயமரியாதை தராத வாழ்க்கையிலும் எதைத்தான் சிந்திக்க முடியும்? அதிகாரிகளை மதிக்காத ஊழியர்கள் — அதட்டி உறுட்டும் சமுதாயச் சமூக சிந்தனைகளால் எவ்வளவு வேதனைகள்? தெய்வீக சிந்தனையில்லாத மக்கள், கீழ்ப்படிவில்லாத மாணவர்களால் — ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியாது. இந்த அனுபவம் தொழில் ஸ்தானத்தில் ஏற்படும். குடும்பச் சுபமங்களப் பேச்சுவார்த்தைகள் நன்மை தரும், சல வருத்தம், தோல் வருத்தம், வயிற்று நோ என்பன வரும். கை கால் தாக்கங்கள் கொடுக்கும். வாகனத்தால் இழப்பு அலலது செலவுகள் அதிகரிக்கும். நகைத் தொழில், இடாம்பீகப் பொருள்கள் விற்பனை மின்சாரப்பொருள், சட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்_நாள்கள்:- திங்கள், புதன், வெள்ளி.

### விருச்சிகம்

ஜனநாயக அரசியல் இராணுவ மையத்தை நாடி நகரத் தொடங்கினால் மக்கள் அதிஉச்ச நன்மையும் அடையலாம், மிகக் கஷ்ட வாழ்க்கை, அழிவையும் அடையலாம், கடும் கோபம். பேச்சுக்கலகம், விளக்கச் சிந்தனை, மனிதக் கணிப்பீடு எனமாறி மாறிச் செய்தபடி இருப்பீர்கள். அரச அதிகாரிகள் நன்மை செய்வார்கள். தொழில்ஸ்தானத்தில் பண வரவு அதிகரிக்கும். எதிர்ப்பாலாரால் எதிர்ப்புக்கள் ஏற்பட இடம் உண்டு. நாரிநோ, நரம்பு வருத்தம், சிரசு. மூக்கு தொண்டை வருத்தங்கள் என்பன வரும். அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்ளவும். வீடு மனை பற்றிய சிந்தனை மாறி மாறி வர இடம் உண்டு. கஜு, முந்திரி வற்றல் சாப்பிடவும். சட்டத் துறை, மருந்துத்துறை, இரும்புத் துறை, விவசாயத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்கள் :-திங்கள், புதன், வெள்ளி.

### தனுசு

ஏன் போட்டி போடுகிறீர்கள்? சிறிய விஷயமானாலும் அதிக கருத்துடன் செயற்படுங்கள். அதனால் பலன்கள் அதிகம் வந்து சேரும். தொழில்ஸ்தானத்தில் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். மேலதிகாரிகள் உதவிகள், அரச உதவிகள் என்பன கிடைக்கும். சகோதரம் அல்லது பெற்றோருடன் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். இடமாற்றங்களால் இழப்புக்கள் ஏற்படலாம்- பொருள் இழப்பு ஒன்று நடக்க இடம் உண்டு வயிற்றில் வருத்தம், கை கால் விறைப்பு, வாய்வுத் தொல்லை என்பன ஏற்பட இடம் உண்டு தூரதேசச் செய்திகளால் மகிழ்ச்சி, உற்சாகங்கள் ஏற்பட இடம் உண்டு. மின்சாரத் துறை, வியாபாரத் துறை, செய்தித் துறை, மருந்துத்துறை, விவசாயத் துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன் வெள்ளி

### மகரம்

கவர்ச்சிகளால் சாதனை புரியலாம்எனஎண்ணலாகாது நன்மைகளைச் செய்து மனிதர்களின் உள்ளங்களில் இடம் பிடிப்பதே சிறப்பாகும். எனவே தொழில் ஸ்தானங்களில் நம்பிக்கையுடன் செயற்பட்டு வாருங்கள். அதனால் உறுதியான இலாபங்கள் காலகதியில்கொடுக்கஇடம்உண்டு. எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமைகள் ஏற்பட இடம் உண்டு. விபத்துக்கள், தலைப் பாரம், மனக்குழப்பம், மூட்டு வலி, கைகால்பிடிப்பு என்பன வர இடம் உண்டு. விவசாயத் துறை, ரீ. வித்துறை, கொம்பியூட்டர், மருந்துத்துறை, சட்டத்துறை, குருத்துறை, போன்ற துறையினருக்கு நன்மைகளும், மாற்றங்களும் கொடுக்கும். மறதிகளால் பொருள் இழப்புக்கள் சிலருக்கு ஏற்பட இடமுண்டு

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன்.

### கும்பம்

ஒரு வட்டத்துக்குள் நின்று செயற்படும் மனித முயற்சியால் ஓர் எல்லைவரையும் தான் நாம் செயற்பட முடியும். எனவே தொழில் ஸ்தானத்தில் நீங்கள் பலதிட்டங்கள் போட்டாலும் நிறைவேற்றுவது கடினமாகத்தான் இருக்கும். விட்டுவிட்டுப் பலன்கள் நடக்கும். எனவே எமது குடும்பவட்டத்துக்குள் நிறைவுபட திட்டமிடுங்கள். அதனால் நன்மைகள் அதிகரிக்கும். மாற்றங்கள் சகஜமாகும். பொருள்களால் மனவேதனை வரும் பொருள் நிலையால் உதவிகள் கிடைக்கும் தூரதேசத்திலிருந்து செய்திகள் வரும் சகோதர உதவிகள் உண்டு. தொண்டைவரட்சி, குளிரால் பீடைகள், படபடப்பு. வாய்வு. நரம்புவருத்தங்கள் வரும் பிரயாணத் துறை. குருத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள், நன்மைகள் அதிகரிக்கும்

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன்.

### மீனம்

புதிய முயற்சிகளால் உங்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் உதவிகள் நன்மையான இலாபங்கள் என்பன கிடைக்கும். குடும்பத்தினர் ஒருவருக்கு ஏற்படும் மாற்றங்கள் நன்மை என நம்பலாகாது. அரச உதவிகள், சட்டநடவடிக்கைகள் நன்மைதரும். வீடு, வாகனங்களால் பொருள் செலவு. புதிய நடவடிக்கை மாற்றங்கள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்களின் உதவிகள் கிடைக்கும். நகைத்துறை, பாதுகாப்புத்துறை, செய்தித்துறை, இசைத்துறை. வியாபாரத் துறையினர்கள் போன்றவர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். குளிர், சளித்தொல்லை, காய்ச்சல், கால்வருத்தங்கள், சமியாக்குணம் வரலாம். எனவே சாப்பாட்டில் கவனமாக இருக்கவும். நேரத்திற்குச் சாப்பிடவும் அல்லது வயிற்று வருத்தங்கள் வரும். போக்குவரத்தில் நிதானமாக இருக்கவும் அல்லது இழப்புக்கள் வர இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள் வியாழன்.

**மகாதேவா ஜோதிடம்**


## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



சிரோன்மணி

**இளையதம்பி குமாரசுவாமி J. P.**

(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம் 07 — 04 — 1921 மறைவு 22 — 11 — 1997

திதி: 19 — 11 — 2000

பாசமிகு தந்தையாய் பாரினில் எமை வளர்த்து
வாழ்விலே வளம் பெற்று நாம் வாழ
வழி அமைத்த தந்தையே!
தாங்கள் மறைந்து ஆண்டு மூன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்.

தங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

கமலவாசா,
ஆனைக்கோட்டை. (80638)

# பொருள்கள் சேவைகள் வரி மேலும் ஒரு சதவீதத்தினால் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 19

பொருள்கள் சேவைகள் வரியை மேலும் ஒருசதவீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் உத்தேசித்து வருவதாக நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 6மாதங்களில் இறக்குமதிச் செலவு ஏற்றுமதிச் செலவை விட மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாலும் —

அத்துடன் எதிர்பார்த்த அளவுக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்காததாலும் —

நாட்டின் மொத்த வருமானத்தை விட மொத்தச் செலவு அதிகரித்துள்ளதாலும் —

பொருள்கள் சேவைகள் வரியை ஒருசதவீதத்தால் அதிகரிப்பதற்கு அல்லது இதுவரைஇந்தவரி விதிக்கப்படாத பொருள்களுக்கு வரிவிதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த வருமானவரி ஆணையாளர் வீரசூரிய இவ்வாறான ஒரு முடிவை நாடாளுமன்றம் எடுக்குமானால் அதனை நடைமுறைப்படுத்தத் தான் தயாராக இருப்பதாகச் சொன்னார். (ஐ-20)

## கண்ணீர்ப் பூக்கள்

விவசாய பீட பயிரியல் துறை விரிவுரையாளர்
செல்வி லோ. தர்மலிங்கம்
அவர்களின் பாசமிகு தந்தையார்

### அமரர் பொன்னம்பலம் தர்மலிங்கம்

அவர்கள் 18—11—2000 அன்று சிவபதமெய்தியதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

விவசாய பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(80676)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

### அமரர் விநாசித்தம்பி சின்னத்தம்பி

(கடவுள்)
விடத்தற்பளை — மிருசுவில்

கடந்த 21—10—2000 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி, சபிண்டீகரண கிரியைகள் நாளை (20—11—2000) திங்கட்கிழமை காலை நடைபெற உள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் மேற்படி கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

★ குறிப்பு:- அன்னாரின் மகன் இரத்தினசிங்கம் அவர்களது பெரிய தோட்டம், கரவெட்டி கிழக்கு கரவெட்டியில் உள்ள இல்லத்தில் மேற்படி நிகழ்வுகள் நடைபெறும்.

குடும்பத்தினர்
விடத்தற்பளை — மிருசுவில்.

மகன்
சி. இரத்தினசிங்கம்
(இ. போ. ச. நடத்துநர்)
கரவை கிழக்கு.
(சி/13893)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1940 — 10 — 14

மறைவு 2000 — 10 — 20

### திருமதி செல்லையா அன்னபூரணம்

இம் மாநிலத்தில் எழுந்தெமது இடர் களைந்த அம்மா! நின் அன்புக்கு ஏங்கித் தவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்:

- குடும்பத்தினர்.

'ராணி பவனம்',
சமரபாகு,
வல்வெட்டித்துறை.
(80671)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், நவ. 19

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய சோமவாரப் பூசை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

சோமவாரப் பூசையின் போது 'மழை வேண்டி' அடியவர்கள் விசேட வழிபாடுகளைச் செய்வர். (இ)

★ ★ ★

இணுவில் விசாலாட்சி சமேத விஸ்வேஸ்வர சுவாமி திருக்கோயிலில் முதலாவது கார்த்திகை சோமவார உற்சவம் நாளை திங்கட்கிழமை மாலை இடம்பெறும்

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, நவ. 19

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் அமரர் அ.தம்பிராசா ஞாபகார்த்தமாக மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:

மானிப்பாய் றெட் றேஞ்சர் விளையாட்டுக்கழகம் எதிர் அராலி ஏ. எல். வி. கழகம், அளவெட்டி யுத் வி. கழகம் எதிர் சுழிபுரம் விக்ரோரியன் வி கழகம். (இ-86)

★ ★ ★

திருநெல்வேலி அபிராமி முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி இ. த. க. பாடசாலை அதிபர் க. ஜெயானந்தன் தலைமையில் நடைபெறும்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி பிரதம விருந்தினராகவும் டாக்டர் செல்வி ப. சின்னப்பா, கிராம சேவை அலுவலர் க. சிவராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

★ ★ ★

பருத்தித்துறை ஆத்தியடி சைவமன்றப் பாலர் பாடசாலையின் வருடாந்த மழலைகள் விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-30மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக பட்டயக் கணக்காளர் சோமசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். (ஐ-15)

★ ★ ★

யாழ். கொமர்ஷல் வங்கியின் ஆதரவுடன் யாழ். பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் 15 வயதுப் பிரிவின் இறுதியாட்டம் இன்று காலை 8.30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரியும், யாழ். மத்திய கல்லூரியும் பங்கு பற்றுகின்றன.

இறுதியில் இடம்பெறும் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும் துடுப்பாட்டச் சங்கத்தின் முன்னாள் தலைவருமான அ. பஞ்சலிங்கம் கலந்து கொள்வார். (ஐ — 3)

## இன்று நடைபெறவுள்ள நாவலர் குருபூசை நிகழ்ச்சிகள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 121 ஆவது குருபூசைத்தினம் இன்றாகும்.

இதனை ஒட்டி குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் விசேட பூசைகளும் பொது அமைப்புகள் மற்றும் சமய நிறுவனங்களில் விசேட நிகழ்ச்சிகளாக, சமயச் சொற்பொழிவுகளும் பரிசளிப்பு வைபவங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குருபூசை நிகழ்வுகள் இடம்பெறும் இடங்களும் அவை பற்றிய விவரங்களும் வருமாறு:-

★ யாழ். சைவ பரிபாலன சபையினர் ஏற்பாடு செய்துள்ள குருபூசை நிகழ்வுகள் இன்று காலை 8மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சபையின் உபதலைவர் சைவப் புலவர் வ. கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளன.

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் க. சிவராமலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்குவார்.

★ யாழ். பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள குருபூசை நிகழ்வுகள் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் இன்று காலை 7 மணிக்கு நடைபெறும். சிறப்புச் சொற்பொழிவுகள், பஜனைகள் விசேட நிகழ்வுகளாக இடம்பெறும்.

★ அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட குருபூசை நிகழ்வுகள் இன்று முத்திரைச் சந்தியில் உள்ள ஸ்ரீ காமாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளன, பஜனைகள், சொற்பொழிவுகள் என்பனவும் விசேட நிகழ்வுகளாக இடம்பெறும்.

★ யாழ்.இந்துசமய பேரவை ஏற்பாடு செய்துள்ள நிகழ்வுகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று காலை 10 மணிக்குப் பேரவையின் உபதலைவர் ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

பேராசிரியர் சி. க. சிற்றம்பலம், வித்துவான் க. சொக்கலிங்கம், கவிஞர் சோ. பத்மநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர். அருட்கவி சி. விநாசித்தம்பி தொடக்கவுரை நிகழ்த்துவார்.

★ உடுவில் இந்து இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2 30மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத்தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இராமநாதன் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் சிறப்புரையாற்றுவார்.

★ தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் ஏற்பாடு செய்துள்ள குருபூசை நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு நல்லூரில் உள்ள ஸ்ரீ துர்க்கா தேவி மண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளன.

துர்க்காபுரம் மகளிர் இல்லப்பிள்ளைகளின் பண்ணிசை, பேச்சு மற்றும் ஆறு. திருமுருகனின் சமயச் சொற்பொழிவு என்பனவும் இடம்பெறும்.

★ உடுவில் கல்விக் கோட்டத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள சைவத் திருமுறை விழாவும், குருபூசையும் காலை 8 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் உடுவில் கல்விக் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வின் ஆசியுரையை மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலய கு. ஜெயக்குமாரக் குருக்கள் நிகழ்த்துவார்.

மற்றும் சிறப்புரைகளும் இணுவில் இந்துக்கல்லூரி மாணவர்களின் அப்பூதியடிகள் நாடகமும் இடம்பெறும். (ஐ-7-30-175)

## இன்று நடப்பவை

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் அகதிகள் முகாம்களில் இடம்பெற்றுவரும் இலவச மருத்துவ சேவைத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பொன்னம்பலம் மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள அகதிமுகாமில் தங்கியுள்ளவர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள் நடைபெற உள்ளன. டாக்டர் ரி. யோகேஸ்வரதேவன் மருத்துவ பரிசோதனைகளை நடத்துவார். (இ)

★ ★ ★

கொக்குவிலில் உள்ள ஸ்ரீ சத்திய சாயிபாபா சேவா நிலையத்தில் சாயி மகளிர் தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாயி பஜனை, கூட்டுப் பிரார்த்தனை, காயத்திரி மந்திர வழிபாடு, தியானம் ஆகியனஇடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ந. சிவகடாட்சத்தின் சேவைநலம்பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி கலை அரங்கில் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி ச. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

திருநெல்வேலி சத்திய சாயிபாபா சமித்தியில் மகளிர் தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ்.மருத்துவ பீடாதிபதி செல்வி வசந்தி அரசரத்தினத்தின் சொற்பொழிவும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

★ ★ ★

விழிப்புலன்இழந்த மாணவர்களுக்கு கற்பித்தல் செயற்பாட்டில்ஈடுபடுவதற்காக வலிகாமம் கல்வி வலயத்தில் இடம்பெற்று வரும் தொடர் கருத்தரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை விழிப்புலனிழந்த மாணவர்களின் விசேட உளப்பிரச்சினை தொடர்பான விரிவுரைகள் இடம்பெறஉள்ளன.

மருதனார்மடம் இராமநாதன்கல்லூரியில் நடைபெற உள்ள இவ் விரிவுரைகளை உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராஜா நிகழ்த்தஉள்ளார். (ஐ)

★ ★ ★

சண்டிலிப்பாய் ஐடியல் நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நிறுவன அதிபர் என். பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ரி. வேல்நம்பி, தீவக வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. கமலநாதன், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் எஸ். சிவனேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

அதி சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்வழங்கலும்தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ரி. வேல்நம்பி தலைமையில் பட்டிமண்டபமும் நடைபெறும். (ஐ-73)

# யாழ்ப்பாண நாட்டுக் கூத்து இன்று வெள்ளவத்தையில் அரங்கேற்றம்

கொழும்பு,நவ.19

இந்து சமயப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் யாழ். பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக்கழகத்துடன் இணைந்து வழங்கும் "இலங்கைத் தமிழ்ப் பாரம்பரிய ஆட்ட நாட்டுக்கூத்து" என்னும் விசேட நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளரும், தீவகக் கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தருமான செல்லையா மெற்றாஸ்மயில் தயாரித்த "வேழம்படுத்த வீராங்கனை" என்னும் ஆட்ட நாட்டுக் கூத்தும் -

கலாபூஷணம் சின்னமணி, நடிகைக் கலாமணி அரியாலையூர் செல்வம் ஆகியோர் பங்கு கொள்ளும் "சத்தியவான் சாவித்திரி" என்னும் கூத்தும் இடம்பெறும்.

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரம், இந்து கலாசார அலுவல்களுக்கான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.(இ-7)

# மாதத்தில் 10 நாள்களாவது நாடாளுமன்றைக் கூட்டுக!

## சபாநாயகரிடம் கோரிக்கை

ஒரு மாதத்தில் குறைந்தது பத்து நாள்களாவது நாடாளுமன்ற அமர்வுகள் நடத்தப்பட வேண்டும் என்று சபாநாயகர் அனுரா பண்டார நாயக்காவிடம் ஐ.தே.கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வெள்ளியன்று சபாநாயகரைச் சந்தித்த ஐ.தே.கட்சியின் தூதுக்குழு இந்தக் கோரிக்கையை விடுத்தது.

தற்பொழுது மாதத்தின் முதல் வாரத்தில் நான்கு நாள்களும், மூன்றாம் வாரத்தில் நான்கு நாள்களுமாக எட்டு நாளகள் மட்டுமே நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறுகின்றன.

இதனால் முக்கிய விடயங்கள் பலவற்றை ஆராய்ந்து அவை பற்றிய தீர்மானங்களை எடுக்க முடியாதுள்ளதாகவும் ஐ.தே.கட்சியின் தூதுக்குழு சபாநாயகரிடம் தெரிவித்தது.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதாகத் தெரிவித்தார் என ஐ.தே.கட்சியின் தவிசாளர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.(ஐ-7)

## பொதுத் தேர்தல் காலத்தில்

# கல்வி அமைச்சு வழங்கிய நியமனங்கள் அனைத்தும் ரத்து!

கொழும்பு,நவ.19

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் (கடந்த ஓகஸ்ட் முதல்) கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட சகல நியமனங்களையும் உடன் ரத்துச் செய்யுமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த சகல அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

முறையான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படாமல் பாடசாலை நூலக உதவியாளர், பதிவேட்டறை உதவியாளர் மற்றும் சிற்றூழியர், காவலாளி எனப் பலவகையான நியமனங்கள் இந்தக் காலப் பகுதியில் வழங்கப்பட்டிருப்பதாகவும் - இதனால் பல வருடங்களாக சமயாசமய ஊழியர்களாகக் கடமையாற்றிய பலர் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து தமக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் புதிய அரசாங்கம் பதவி ஏற்கும் வரை எந்த விதமான அரச நியமனங்களும் வழங்கப்படக்கூடாது என்ற சட்டத்துக்கு மாறாகவே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன- என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8)

# சட்ட விரோதமாக மண் ஏற்றியதாக நால்வர் நீதிமன்றத்தில் ஆஜர்

புலோலி வல்லிபுரக் கோயில் பகுதியில் சட்ட விரோதமாக லொறி ஒன்றில் மணல் ஏற்றியதாகக் கூறப்படும் நால்வரை சந்தேகத்தின் பேரில் கைது செய்த பருத்தித்துறைப் பொலீஸார், அவர்களை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வலிகாமம் பகுதியைச் சேர்ந்த யூலியஸ் பந்தசேன (வயது35), சுந்தரம் மகேந்திரன்(வயது32), பெலிக்நாதன்(வயது 28), சுப்பிரமணியம் சிவநாதன் (வயது 30) ஆகிய நால்வருமே கைதானவர்களாவர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ச. ஏகநாதன் முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டனர்.

அப்பொழுதே மணல் ஏற்றிய குற்றத்திற்காக முதளாவது எதிரிக்கு 500 ரூபா அபராதம் விதித்து வதிரி முருகன் ஆலயத்திற்கு அறக் கொடையாக 500 ரூபா செலுத்தி பற்றுச்சீட்டை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

2 ஆம், 3ஆம், 4ஆம் எதிரிகளை கடுமையாக எச்சரிக்கை செய்து வழக்கு விசாரணையை வேறொரு திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார். (இ-109)

## கால்கோள் விழா

சங்கானை மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலையின் நூற்றாண்டு விழாவினை ஒட்டிய காலகோள் விழாவும் பொருட்காட்சியும் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் திரு. வி.நடராசா தலைமையில் நடைபெறும். (இ)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 17 - 05 - 1975



உதிர்வு 20 - 10 - 2000

**செல்வி தர்சினி மாணிக்கவாசகர்**

**(3 ஆம் வருட விஞ்ஞானபீட மாணவி)**

நேற்றுவரை எம்மோடு
நிஜமாக இருந்தவளே!
பல்கலைப் பயணத்தில்
பாதி தூரம் வந்தவளே - தர்ஷி(நீ)
பட்டம் பெறுவாய் என நாமிருக்க
பாதி வழியில் எமைவிட்டு
விண்ணோடு கலந்தாயோ!

*- 3 ஆம் வருட விஞ்ஞானபீட மாணவர்கள்.*

(80671)


## பரிசளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்.நகர் மைய றோட்டரக்ட் கழகத்தின் அனுசரணையுடன் நடைபெறும் ஜீ.சி.ஈ.(சாதாரணதர) முன்னோடிப் பரீட்சை மற்றும் பொது அறிவு நுண்ணறிவுத் தேடல் பரீட்சைகளில் முதன்மை பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இன்று மதியம் 12 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் லயன் வன்னியசிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட றோட்டரிக் கழகத் தலைவர் அ.பஞ்சலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-10)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,நவ.19

நீரிழிவு நோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு கோப்பாய் லயன்ஸ் கழகமும் லயன் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தமும் இணைந்து நடத்தும் விசேட மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சிறுப்பிட்டி மேற்கு அ.த.க. பாடசாலையில் நடைபெறும்.(இ-10)

## இளைஞன் விடுவிப்பு

வவுனியா,நவ.19

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு 18 மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி என். யோகசிகாமணியின் உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியைச் சேர்ந்த பாலசிங்கம் இரத்தினகாந்தன்(வயது 28) என்பவரே விடுவிக்கப்பட்டவர் ஆவார். (இ-8)

## கல்வயல் வே.குமாரசுவாமிக்கு "கவிமாமணி" விருது

யாழ்ப்பாணம்,நவ.19

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசையை முன்னிட்டு இந்து சமயப் பேரவை கடந்த வெள்ளியன்று மரபுக் கவிதைப் போட்டி ஒன்றை நடத்தியது.

போட்டியாளர்கள் பரீட்சை மண்டபத்துக்கு அழைக்கப்பட்டு அங்கு வைத்து மரபுக் கவிதை எழுதும் போட்டி நடத்தப்பட்டது.

இந்தப் போட்டியில் சிறப்பாகக் கவிதை யாத்த முதலாமவருக்கு 'கவிமாமணி' விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதை கவிஞர் கல்வயல் வே.குமாரசுவாமி பெறுகிறார். சிறந்த மரபுக் கவிதைகளை வரைந்த மூவருக்கு 'கவிமணி' விருது வழங்கப்படுகிறது.

சித்தாந்த பண்டிதர் க.முத்துவேலு (வல்வெட்டித்துறை), சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன்(நாச்சிமார்கோயிலடி), சயனொளிபவன் முகுந்தன் (கந்தர்மடம்) ஆகிய மூவருக்குமே 'கவிமணி' விருது வழங்கப்படுகிறது.

இந்து சமயப் பேரவையால் நியமிக்கப்பட்ட புலவர் குழுவே இப் போட்டியில் விருதுக்குரியவர்களைத் தெரிவு செய்துள்ளது.

இவர்களுக்கான விருதுகள் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள நாவலர் குரு பூசை விழாவில் வைத்து வழங்கப்பட உள்ளன. (ஐ)

## கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம்,நவ.19

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபை நடத்தும் கண்பரிசோதனை முகாம் இன்று காலை 9 மணிக்கு மாவட்ட வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது. (இ-7-109)

# மக்கள் முகம்



இலங்கை கலாசார அமைச்சின், இந்து பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அரச இலக்கிய விருதினை பெறுவதற்கு சங்கீத இரத்தினம் லய ஞான வாரிதி திரு.சி.மகேந்திரன் ஆக்கிய 'தமிழர் முழவியல்' நூல் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மிருதங்க மேதை ஏ.எஸ்.இராமநாதனின் பிரதம மாணவரும் இராமநாதன் அக்கடமியில் சங்கீத ரத்தினம் டிப்ளோமா முதலாம் பிரிவில் சித்தியடைந்தவருமாவார். யாழ்.பல்கலைக்கழக நுண்கலைக் கழக நடனத்துறையில் மிருதங்க விரிவுரையாளராகக் கடமையாற்றும் இவர் சிங்கப்பூர், மலேசியா, சுமாத்திராத்தீவு முதலான இடங்களுக்குச் சென்று நிகழ்வுகள் நடத்தி பட்டங்களும், பரிசில்களும் பெற்றுள்ளார். இலங்கை வானொலி, ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் 'ஏ' தர கலைஞராகவுள்ளார். எமது மண்ணில் முதற்தரமான பல மாணவர்களை உருவாக்கி அவர்கள் மேலை நாடுகளுக்குச் சென்று இக்கலையைப் பரப்பி நன்மதிப்பைப் பெறவைத்த பெருமைக்குரியவராவார். (ஐ)

◇ ◇ ◇ ◇



நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த கனகமணி தம்பிப்பிள்ளை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றார்.

நெடுந்தீவு மேற்கு மாதர் சங்கத்தின் தலைவியாகவும், செயலாளராகவும் நீண்ட காலம் பணியாற்றிய இவர் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை ஆவார். (ஐ)

◇ ◇ ◇ ◇

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட முதுநிலை பதவி நிலை உத்தியோகத்தர் (புள்ளிவிவரவியல்) சரவணமுத்து தேவதாசன் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிவான் ப. சுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் பருத்தித்துறை கற்கோவளத்தைச் சேர்ந்தவர் ஆவார். (ஐ)

◇ ◇ ◇ ◇



பண்ணாகம் சுழிபுரத்தைச் சேர்ந்த க.வாமதேவன் அகில இலங்கை சமாதான நீதிவானாக மல்லாகம் நீதிபதி பி.பாலசுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார்.

பத்திரிகையாளரும் சமூக சேவையாளருமான இவர் பல பொது நிறுவனங்களில் அங்கம் வகித்து சமூக சேவைகளை மேற்கொண்டு வருகிறார். பல சைவ சமய வழிபாட்டு நூல்களை மறுபதிப்புச் செய்து வெளியிட்டு வரும் குழுக்களில் ஒருவராகவும் விளங்குகின்றார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராகவும், தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கத்தின் கௌரவ செயலாளராகவும், பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் பரிபாலனசபை பொருளாளராகவும், பண்ணாகம் ஸ்ரீ முருகன் இந்து சமய விருத்திச் சங்க உபதலைவராகவும், வழக்கம்பரை பஜனைச் சபையின் செயலாளராகவும், 'நிலையக் குரல்'ஆசிரியராகவும் விளங்கி வருகின்றார். (ஐ)

◇ ◇ ◇ ◇

கோப்பாய் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் டாக்டர் வி.தியாகராசா, லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் 96பி லயன் றோகண உடவத்தையினால் பிராந்தியம் 9க்கு பிராந்திய தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு உதவியாக உரும்பிராய் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் ஆர்.நடராசா, கொக்குவில் லயன்ஸ் கழக தலைவர் லயன் பொ.கமலநாதன் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

பிராந்தியம் 9ன் கீழ் கோப்பாய், மானிப்பாய் வட்டம், மானிப்பாய் பரிஸ், சுன்னாகம், உரும்பிராய், இணுவில், கொக்குவில், வடமராட்சி, சாவகச்சேரி ஆகிய ஒன்பது லயன்ஸ் கழகங்கள் செயற்படுகின்றன.

லயன் டாக்டர் வி. தியாகராசா இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், கோப்பாய் - யாழ்ப்பாணம் கலை பண்பாட்டுக்கழகம்,நீதியும் சமாதானத்திற்குமான சபை ஆகியவற்றின் உறுப்பினராகவும், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 35 இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களுக்கு வேண்டிய மருத்துவ தேவைக்கான பொறுப்பாளராகவும் பணியாற்றுவதுடன் மற்றும் பல சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றார். (ஐ-152)

◇ ◇ ◇ ◇



இலங்கைக் கலைக் கழகம் நடத்திய சுருதி லய அபிநயப் போட்டியில் பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வி சியாமளா ஆனந்தராஜா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவருக்கு விருதும் சான்றிதழும் 5 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டுள்ளது.

இவர் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி நடன ஆசிரியை செல்வி இன்பமலர் பரமலிங்கத்தின் நடன மாணவியும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவியும் ஆவார். (ஐ)

◇ ◇ ◇ ◇


சமூக சேவகரும், சமாதான நீதிவானுமாகிய க.வ.அரசன் சங்கானை மத்தியில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அலகு ஒன்றின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க, வலி. மேற்குப் பிரிவின் தலைவர் நா. குகராசா தலைமையில் நடைபெற்ற இந்த அலகின் அங்குரார்ப்பண வைபவத்தில் உப தலைவராக க.வீரசிங்கும் செயலாளராக வே.கேசவதாசன் உட்பட 9பேர் கொண்ட இயக்குநர் சபையும் தெரிவு செய்யப்பட்டது.

அங்குரார்ப்பண நிகழ்வின் விசேட அதிதியாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை உப தலைவர் என். உதயசூரியன் கலந்து கொண்டார். (ஐ-15)

◇ ◇ ◇ ◇

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு.அண்ணாமலை மார்க்கண்டர் யாழ்ப்பாணம் நீதி நிர்வாகப் பகுதிக்கான சமாதான நீதிவானாக கௌரவ நீதி அரசமைப்பு அலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.



இவர் முன்பு பல அரசாங்க ஆஸ்பத்திரிகளில் எழுதுநராய் கடமையாற்றி இளைப்பாறியவர் ஆவார். இவர் வட்டுக்கோட்டை கிராமசபையின் முன்னாள் பதில் தலைவரும், தற்போது மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை, வலிமேற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் சங்கானை ஆகியவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், சித்தன்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் வட்டுக்கோட்டை கிழக்கு அலகு செஞ்சிலுவைச் சங்க தலைவராகவும், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகசபை உறுப்பினராகவும் பணிபுரிந்து வருகின்றார்.

இவர் மலேசியாவில் ரயில் நிலைய அதிபராயிருந்த இராமலிங்கம் அண்ணாமலை தம்பதிகளின் மூத்த புதல்வராவார். (ஐ-180)

# படையினரின் முன்னரங்க நிலைகள் மீது ஓமந்தையில் புலிகள் திடீர்த் தாக்குதல்

## சிப்பாய்கள் உட்பட ஏழு பேர் காணாமற் போய்விட்டனர்

வவுனியா,நவ.19

ஓமந்தைப் பகுதியில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் ஒரு உத்தியோகத்தரும் ஆறு படையினரும் காணாமற்போய் விட்டனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து படையினர் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தினர் எனவும் -

இதன்போது விடுதலைப் புலிகள் தரப்பில் 4 பேர் உயிரிழந்தனர் எனவும் -அது மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஓமந்தைப் பகுதியில் நேற்றுக் காலை முதல் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் காரணமாக வவுனியா நகரப் பகுதி அதிர்ந்ததாகவும் -

மக்கள் மத்தியில் பீதி நிலை காணப்பட்டதாகவும் -

வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (இ-7)

# அமைச்சர்கள் எண்ணிக்கை அதிகரிப்பால் சம்பளம் கொடுக்க முடியாத நிலை

கொழும்பு,நவ.19

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கான நவம்பர், டிசம்பர் மாதச் சம்பளங்களைக் கொடுக்க முடியாத நிலைமை உருவாகி உள்ளதாக திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சர்களின் இந்த வருடத்திற்கான கொடுப்பனவுகளுக்கான நிதி கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் புதிய அரசாங்கத்தில் முன்னர் இருந்ததை விட அமைச்சர்களின் எண்ணிக்கை எதிர்பாராத விதமாக அதிகரித்திருப்பதால் அவர்களின் கொடுப்பனவுகளுக்கு என ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதாக இல்லை என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த இரு மாதங்களுக்கும் தேவையான மேலதிக நிதியைப் பெறுவதற்கு அரசு பூரண திட்ட அறிக்கை ஒன்றை நாடாளுமன்றத்தில் த"க்கல் செய்ய வேண்டும். ஆனால் இதுவரை அவ்வாறான அறிக்கை எதுவும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதி 31 அமைச்சர்களின் கொடுப்பனவை மேற்கொள்வதற்கே போதுமானதாக உள்ளது. ஆனால தற்போது அமைச்சர்களின் எண்ணிக்கை 42ஆக உயர்ந்துள்ளதாலேயே இந்த நிலை தோன்றியுள்ளது என்று திறைசேரி வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-ம-20)

### ஜீ.சீ.ஈ.சாதாரணதர, உயர்தர பரீட்சைகளுக்கு

# 2001 ஆம் ஆண்டிலிருந்து தேசிய அ.அட்டை கட்டாயம்

கொழும்பு,நவ.19

2001 ஆம் ஆண்டிலிருந்து ஜீ.சீ.ஈ. சாதாரணதர, உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களிடம் தேசிய அடையாள அட்டை கட்டாயம் இருக்க வேண்டும் என பரீட்சைகள் ஆணையாளர் டி.அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களை அஞ்சல் அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டு என்பவற்றுடன் அனுமதிப்பதால் பல்வேறு மோசடிகள் இடம் பெறுகின்றன. என்பதால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜீ.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் மட்டுமே அஞ்சல் அடையாள அட்டை, கடவுச் சீட்டு என்பவை அனுமதிக்கப்படும்.

தேசிய அடையாள அட்டை தவிர்ந்த ஏனைய அடையாளப்படுத்தும் ஆவணங்களை வைத்திருப்போர நடைபெற உள்ள ஜீ.சி.ஈ சாதாரணதர பரீட்சையின் போது அவற்றின் பிரதி ஒன்றை பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரியிடம் முன் கூட்டியே ஒப்படைக்க வேண்டும் என்றும் பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ஐ-8)


**அன்பர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் ஓர் அன்பான அறிவித்தல்**

மட்டுவில் வடக்கில் இயங்கி வந்த

**"ஆரோக்கிய வாசக வைத்தியசாலை"**

தற்போது நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்துக்கு அண்மையில் இயங்கி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தகவல்:
உரிமையாளர்.

(80543)



25 வருட காலமாக யாழ்.மக்களின் நல்லபிமானத்தை வென்ற வடபகுதிக்கு மார்பிள் வகைகளின் ஏக விநியோகஸ்தர்களும் இறக்குமதியாளர்களுமான

**நியு விமாகி ஸ்தாபனத்தினர்**

தமது 25 வருட கால வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் ஆதரவு நல்கிய வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நன்றிகளைக் கூறுவதோடு

**இம்முறை விஷேட விலைக் கழிவுடன் வழங்குகிறார்கள்!**

குளியலறை சாதனங்கள் - பல வர்ணங்களில் நவீன டிசைன்களில் ஸ்கொடிங்பேன், வோஸ் பேசின், Kitchen சிங், Lab சிங், Stainless Steels சிங், யூரினல்ஸ், எண்ணற்ற டிசைன்களில் சுவரோடுகள் (Wall Tiles) தரை ஓடுகள் (Floor Tiles)

P.V.C. குழாய்கள், Tapகள், சிவப்பு சமெந்து, வெள்ளை சமெந்து/ போமிகா, தரைவிரிப்புக்கள் (Linonean Sheet's), பெயின்ட் வகைகள், Tea Set, Dinner Set, Glass வகைகள்.

உள்நாட்டு, வெளிநாட்டு மார்பிள் வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்.



வட பகுதியின் ஏக விநியோகஸ்தர்கள்
Lanka Tiles,
Lanka Wall Tiles,
Ceylon Ceramic Co-Operation.

கோயில்கள், பாடசாலைகள் மற்றும் புனருத்தாரணங்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்

மார்பிள் விற்பனையில் வடபகுதியில் முன்னணி ஸ்தாபனம்!

**நியு விமாகி**

27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Office :-

**VENKE IMPEX**

UG. 18, Peoples Park Shopping Complex,
Colombo - 11.
Tel : 332798, 445769
Fax : 074 - 720567
E-Mail : Vemaki @ VISUAL IK

(80644)


### ரஷ்ய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துச் செல்லக்கூடிய இந்த ரக ஆயுதங்கள் தோளில் வைத்து ஏவக்கூடியவை.

" பர் தொழில்நுட்பம் கொண்ட இந்த ஏவுகணை எப்படிப் புலிகளின் கைகளுக்குக் கிடைத்தது என்ற கேள்விதான் இப்போது பாதுகாப்பு வட்டாரங்களை உலுக்கி வருகின்றது. இவற்றை திறந்த சந்தையில் கொள்வனவு செய்ய முடியாது. வாங்க விரும்பும் நாடு அல்லது தரப்பு தனது உண்மைத் தன்மையை நிரூபித்தால் மட்டுமே அவற்றைத் தயாரிப்பு நாட்டிலிருந்து கொள்வனவு செய்ய முடியும். இதனால் புலிகளுக்காக இந்த ஆயுதங்களை வாங்கித் தரக்கூடிய - தமது உண்மைத் தன்மையை நிரூபிக்கக் கூடிய - சர்வதேசக் கூட்டாளிகள் புலிகளுக்கு உள்ளனரா என்பது குறித்து இப்போது அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

- இப்படி அந்த விமர்சகர் குறிப்பிட்டுள்ளார். (உ)

### களஞ்சியப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டபோது வழக்காளி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா குறிப்பிட்ட களஞ்சியத் திருட்டுத் தொடர்பான வழக்கை மீள் விசாரணை செய்து களஞ்சியப் பொறுப்பாளர் ஆர்.கதிர்காமநாதனை விடுதலை செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

மேற்படி வழக்குத் தொடர்பாக யாழ்.நீதிமன்றினால் சம்பந்தப்பட்டவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பது சரியானதே என்றும் -

பொதுமக்களின் நிவாரணப் பொருள்கள், உணவு தொடர்பான விடயத்தில் களஞ்சியப் பொறுப்பாளரை விளக்கமறியலில் வைப்பதற்கு நீதிமன்றுக்கு அதிகாரம் உள்ளதாகவும் - அரச தரப்பில் ஆஜரான சட்டத்தரணி சசி மகேந்திரன் தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக பொலீஸாரின் அறிக்கை கிடைத்த பின்பு எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விசாரணையைத் தொடர்வதாக நீதிபதி எம்.யோகசிகாமணி தெரிவித்தார். (அ-10)

# நோர்வேயின் சமாதான முயற்சி பிரேரணையை ஆதரிக்காதது ஏன்?

## புளொட் அமைப்பு விளக்கம்

யாழ்ப்பாணம்,நவ.19

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் படி பிரேரணைகள் உட்பட கூட்ட அறிவித்தல்கள் 7 நாள்களுக்கு முன்பே எமக்கு அறிவிக்கப்படாததாலேயே நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் யாழ்.மாநகரசபை பிரேரணை வாக்கெடுப்பில் கலந்து கொள்ள முடியவில்லை.

இப்படித் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை புளொட் அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழ். மாநகர சபைப் பிரதி மேயர் என். ரவிராஜ"க்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதான முயற்சிகளை ஆதரிக்கும் பிரேரணை குறித்து மாநகர சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நிகழ்ச்சிநிரலில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

மாநகர சபைக் கட்டளைச் சட்டப்படி மாதாந்தக் கூட்டப் பிரேரணைகள் உட்பட கூட்ட அறிவித்தல்கள் அனைத்தும் ஏழு நாள்களுக்கு முன்பே சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டும். தாங்கள் முறைப்படி முன் அறிவித்தல் கொடுத்து பிரேரணையை சபையில் சமர்ப்பித்திருந்தால் எமது கட்சி உறுப்பினர்கள் சமாதான முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தது, வாக்கொடுப்பில் கலந்து கொள்ளாமல் விட்டது போன்ற சம்பவங்கள் இடம்பெற்றிருக்காது. அத்துடன் எமது கட்சி சமாதான முயற்சிக்கு எதிரானது என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியும் இருக்காது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ம)

### ஒத்திவைப்பு

இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இன்று கொழும்பில் மேடையேற்றப்படவிருந்த 'யாழ்ப்பாண நாட்டுக் கூத்துக்கள்' தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

(முன் வந்த செய்தி 11ஆம் பக்கத்தில்)

### மாவீரர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என ஜெனரல் றொவறான் தளுவத்த சுட்டிக்காட்டினார்.

இராணுவ முகாம்கள் மீது மட்டுமன்றி பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நிலைகள் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தக் கூடும் என்று கிடைத்துள்ள புலனாய்வுத் தகவல் குறித்து ஆராயப்பட்டது.

புலிகளின் தாக்குதல்களைத் தடுப்பதற்கும், அவற்றை எதிர்ப்பதற்குமான முறைகள் குறித்து நீண்ட நேரம் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டது.

தடுப்பு - எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்துப் பல திட்டங்கள் தீட்டப்பட்டு அவற்றை உடன் அமுல் செய்ய முடிவுசெய்யப்பட்டது.

வியாழனன்று மாலை 6 மணிக்குக் கூடிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் நள்ளிரவு வரை தொடர்ந்து நடைபெற்றது.

விந்துனுவெவ தடுப்பு முகாமில் நடைபெற்ற கொன்று குவிப்புச் சம்பவம், அதன்பின்னர் மலையகத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் என்பன குறித்தும் மேற்படி பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் முக்கியத்துவம் கொடுத்து ஆராயப்பட்டது. முடிவுகள், நடவடிக்கைகள் குறித்த விவரங்களைப் பெறமுடியவில்லை.(அ)

### நாளை முதல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை திங்கட்கிழமை பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் இரு விமானச் சேவைகள் இடம்பெறும் என்றும் - நேற்றுப் பயணம் செய்ய இருந்து தடைப்பட்ட 13 பேரும் நாளைய முதலாவது விமானச் சேவையில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர் என்றும் -

இதனால் முதலாவது விமானச் சேவைக்கு ரிக்கெட் பெற்றவர்களில் 13 பேருக்கு இரண்டாவது விமானச் சேவையிலும் -

இரண்டாவது விமானச் சேவைக்கு ரிக்கெட் பெற்றவர்களில் 13 பேருக்கு அடுத்த நாள் விமானச் சேவையிலும் - இடம் ஒதுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திங்களன்று செல்லும் இரு விமானச் சேவைகளுக்கும் பயண அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு முதலாவது விமானச் சேவைக்கான ரிக்கெட்டும் வழங்கப்பட்டுவிட்டது.

முதலாவது விமானச் சேவைக்கு ரிக்கெட் பெற்றவர்களை நாளை காலை நேராக சிங்கள மகாவித்தியாலயத்துக்கு செல்லுமாறும் இரண்டாவது விமானச் சேவைக்கு பயண அனுமதிப் பத்திரம் பெற்று ரிக்கெட் பெறாதவர்களை யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு வந்து ரிக்கெட்டை பெற்றுக்கொள்ளுமாறும் - சிவில் நிர்வாக அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

### யாழ்.நகரில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.19

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் ஆரம்பகாலத் தலைவர் பத்மநாபாவின் 49ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்.நகரப்பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

"அரசே மலையகத் தமிழர்களை காரணமின்றிக் கைது செய்வதை உடன் நிறுத்து" "பண்டாரவளைப் படுகொலைகள் நடந்து நாளாச்சு அரசு விசாரணை என்னாச்சு" "அரசே வன்னிப்பாஸ் கெடுபிடிகளை இல்லாதொழி" "மக்களுக்குத் தேவை யுத்த நிறுத்தம், மக்களுக்குத் தேவை பேச்சுவார்த்தை, மக்களுக்குத் தேவை கௌரவத்தீர்வு, மக்களுக்குத தேவை அமைதியான வாழ்க்கை" "மூன்றாம் தரப்பு பேச்சுவார்த்தைக்கு அடிப்படை நோர்வேயின மத்தியஸ்தத்தை தமிழ் மக்களே பலப்படுத்துங்கள்" "அப்பாவி மக்களை அழிக்கும் நாட்டுக்கு உலக வங்கியே கடன் வழங்காதே" "ஒரு பக்கம் யுத்தப் பிரகடனம் மறுபக்கம் அபிவிருத்திக்கு அமைச்சரா" "யாழ்ப்பாணத்தில் நிமலராஜன் கொலை மட்டு நகரில் சௌந்தரநாயகம் கொலை விசாரணைகள் எங்கே" போன்ற சுலோகங்கள் சுவரொட்டிகளில் காணப்பட்டன.

### விமானப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருதி எதிர்வரும் புதன்கிழமை முதல இந்த அலுவலகம் வெள்ளவத்தையில் இயங்கும் என்றும் -

அதன் பின்னர் பயணிகள் சுலபமாக ரிக்கெட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் -

விமானப்படையினர் தனக்கு உறுதி அளித்துள்ளதாக தி.மகேஸ்வரன் கூறினார். (இ-ம)


**கணக்கீடு**
**A/L 2001**
**ஒற்றைப்பதிவு**
ஆசிரியர்:
திரு.எஸ்.தவா
B.com (Hons. Acc-Spl)
ஆரம்பம்:
19-11-2000
**NEW SCIENCE COLLEGE**
யாழ்ப்பாணம். (80678)

**இன்றைய வீடியோ CD வெளியீடு**
சத்தியராஜ், அருண்பாண்டியன், மன்சூர் அலிகான், குஷ்பூ, ராதிகா, ரோஜா, மணிவண்ணன், செந்தில் நடிப்பில்
**புரட்சிக்காரன்**
(12 மணிக்குப் பின்பு திரையரங்குகளுக்கு வழங்கப்படும்)
**மூர்த்தி வீடியோ**
மானிப்பாய்

எமது நேற்றைய வீடியோ CD வெளியீடு
**வண்ணத்தமிழ் பாட்டு**
**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்
(C/13901)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.